தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 61 மலர் : 1

உள்ளுறை

		பக்கம்
1.	புகழ்சான்ற புத்தாண்டே பொலிக !	1
2.	பாரதியின் பார்வையில் .... பத்திரிகை ...	3
3.	கதையாசிரியர்களும் உத்திகளும் ...	8
4.	கள்வரா ? களவரா ? ...	10
5.	வாதவூரடிகளும் புதுவை ஆண்டாளும் ...	13
6.	உச்ச நீதிமன்றம் ...	21
7.	அம்மையார் பாடியமூத்த திருப்பதிகங்களின் இசை	24
8.	மதிப்புரை ...	27
9.	தமிழ்ப் பெருவெள்ளம் ...	29
10.	தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை ...	33

ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்

பேராசிரியர் க. வெள்ளைவாரணன், சிதம்பரம்

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட். பிஎச்.டி.
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ..
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி,

புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப்பேராசிரியர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி,

பதிப்பாசிரியர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2018

துணர்: 61 பிரபவ — சித்திரை மலர் : 1

ஏப்ரல் — மே 1987

புகழ்சான்ற புத்தாண்டே பொலிக !

ஆறினில் மதியும் கேதும் அறிவனோ டிராகு பொன்னன்
ஆறிரண் டதனில் மேவ ஆனகம் சேயோன் நிற்க
வீறுகொள் காரி எட்டில் வெள்ளிகும் பத்தில் ஏறப்
பேறுசெய் பருதி யோடு பிறங்குசித் திரைநாள் தோன்றும்.

பிரபவ எனுநல் லாண்டே பேருல குவகை மேவ
வருகநீ வளமும் வாழ்வும் வளர்தமிழ்ப் பண்பும் ஓங்கக்
கரவமை இகலும் தீய கலியொடு பிணியும் நீக்கி
மருவிலா இன்ப அன்பு மல்குற வருக வாழி !

செந்தமிழ்ச் சான்றீர் ! பைந்தமிழ் அன்பீர் !
யாவர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

திருவுடையீர் ! வணக்கம்

நமது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்த் தொண்டாகிய நெடுமலர்க் காவின் நெஞ்சமெனத் திகழும் தமிழ்ப் பொழில் துறைகள் தொறும் அரியபல ஆய்வுரைகளை அரும்பி மலர்ந்து அறிவு மணம் பரப்பி இன்றைக்கு அறுபத்தோராவது துணரின் முதல் இதழாக இப்புத்தாண்டுச் சித்திரையிதழ் முகிழ்த்து வருகின்றது.

தமிழ்ப்பொழில் அறுபதாம் அகவைமுற்றி அறுபத்தோராவது ஆண்டில் ஏறு நடையிடுகின்றது. இதுவதன் மணிவிழா ஆண்டு மணிவிழா மாண்பொடு நிகழக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஒல்லும் வாயெல்லாம் பல்லாற்றானும் முயன்று வருகின்றது. தமிழ்மொழி தமிழ்க்கலை, தமிழ்ப் பண்பாடு மேலும் தழைத்துச் செழிக்க இது காறும் உறுதுணையாகி ஊக்கமளித்துவரும் தமிழ்ப் பேரன்பர் களும் தமிழ்ச்சான்றோர்களும் தொடர்ந்து ஆதரவுதந்து அருந் தமிழ் பேணுவாராக!.

பதிப்பாசிரியர்

பாரதியின் பார்வையில் ... ... பத்திரிகை

டாக்டர் சு. சிவகாமசுந்தரி
அவினாசிலிங்கம், மனையியல் கல்லூரி,
கோவை.

மகாகவிஞன் பாரதி அடிமை நாட்டில் அடிமையாகப் பிறந்தவன்; அடிமையாக வாழ்ந்தவன்; அடிமையாகவே செத்தவன். ஆனால், பாரதிக்கும் மற்றைப் பெரும்பான்மை யோருக்கும் ஒரு வேற்றுமை இருந்தது. பாரதி, அடிமையாகப் பிறந்ததற்கு, வாழ்ந்ததற்கு, வருந்தினான். அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற வேட்கை கொண்டான். அவனது ஆன்மா, சிந்தனை, ஆற்றல், செயல் அனைத்தும் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டது. அடிமைத் தனத்தில் முடங்கிக் கிடக்கும் நாட்டுமக்களை எழுச்சியுறச் செய்ய அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டான். எழுச்சிக்கும், ஏற்றத்திற்குமான அடிப்படை ஆற்றலை, அதாவது சக்தியைத் தானும் பெற்று மற்றவர்களது நாடி, நரம்புகளிலும், உயிரிலும், உணர்விலும் ஏற்ற முயற்சித்தான் "பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்" என்பதை உலகறியச் செய்ய எழுத்தை ஆயுதமாகக் கொண்டான்.

வாழ்க்கை என்பது நொய்மையுடையதன்று. ஆற்றல் மிக்குடையது. செத்து மடிவது வாழ்க்கையின் நோக்கமன்று. குறிக்கோளுமன்று ஆக்கத்தின்பாற்பட்டதாக வாழ்க்கை அடைதல் வேண்டும்.

"ஊதுமினோ வெற்றி ஒலிமினோ வாழ்த்தொலிகள்
வேதனைகள் இனி வேண்டா விடுதலையோ திண்ணம்"

என்பது மகாகவியின் அசைக்க முடியாத நம்பிக்கை. நிலத்திற்குச் சுமையாக வாழ்வதில் பாரதிக்கு உடன்பாடு இல்லை. எனவே தான் "அச்சந்தவிர்", "கொடுமையை எதிர்த்து நில்", "செய்வது துணிந்து செய்" "நேர்படப் பேசு", "வெடிப்புறப் பேசு," "குன்றென நிமிர்ந்து நில்", இந்த அறிவுரையைக் கூறப் பாரதி கையாண்ட வழிகளில் ஒன்று தான் அவனை ஒரு *மிகச் சிறந்த பத்திரிகை ஆசிரியனாக ஆக்கியது.* அடிமைப் பட்டுக்கிடந்த தனது நாட்டு மக்களை நினைத்து மட்டும் பாரதி மனம் வருந்தவில்லை உலகின் மூலை முடுக்குகளிலே அடிமைப் பட்டுக்கிடந்த மக்களுக்காகவும் அவன் சிந்தித்தான் எழுதினான் பாடினான். இந்தப் பார்வை அவனது சம காலத்தில் வாழ்ந்த வேறு எந்த இந்திய எழுத்தாளனுக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. பாரத சமுதாயம் உலக அரங்கில் உயர்ந்து நின்று வாழவேண்டும் என்பதற்காகத்

தன்னால் முடிந்த வகையிலெல்லாம் பன்முகப்போர் தொடுக்கப் பாரதி தவறவில்லை. எனவே தான் "*நமக்குத் தொழில் கவிதை; நாட்டுக்குழைத்தல்*" என்பதைப் புது விதியாகவே பாரதி படைத்துக் காட்டினான்.

பாரதத்தின் பாட்டுப் பாட்டன், பாட்டுக்கொரு புலவன் என்ற அளவில்தான் பாரதியை அநேகர் அறிந்து வைத்துள்ளனர். சுவை, பொருள், வளம் அனைத்திலும் சோதி நிறைந்த புதுமையைத் தனது எழுத்துக்கள் அனைத்திலும் பாரதி காட்டத் தவறவில்லை.

கவிதைத் துறையில் பாரதியின் பணியை மிஞ்சுவார் இன்று யாரும் இல்லை. வானத்தைக் கைவசப்படுத்தத் துடித்த சூரியன் அவன். "எழுதுகோல் தெய்வம், இந்த எழுத்தும் தெய்வம்" என்று பாடியது பாரதியின் உணர்ச்சி வெளிப்பாட்டினால் அல்ல அது அவனுடைய வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். இந்த குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள பாரதி பத்திரிகை என்ற சக்தி மிகுந்த ஆயுதத்தைப் பயன்படுத்தத் தவறவில்லை.

1904 ஆம் ஆண்டில் பாரதி பத்திரிகைத் தொழிலில் ஈடுபடத் துவங்கினான். தான் உயிரோடு வாழ்ந்தகாலம் முழுவதும் ஏதாவதொரு பத்திரிகையுடன் தனது வாழ்க்கையை இணைத்துக் கொள்ளப் பாரதி தவறவில்லை. பதினேழு ஆண்டுகள் அந்தப் பணியைத் தனது தொடர் முயற்சியாக ஈடுபட்டுச் செய்தான். மக்களுடன் நேர் நின்று பேசத் துடித்த பாரதிக்குப் பத்திரிகை ஒரு வாயிலாக அமைந்தது.

"*இந்தியா*" என்ற ஒரு வார இதழின் ஆசிரியராய்ப் பாரதி இருந்தான். தமிழ் நாள்இதழான '*சுதேசமித்திரன்*' துணை ஆசிரியராய்ப் பல ஆண்டுகள் பணியாற்றினான். '*சக்கரவர்த்தினி*, என்ற தமிழ் மாத இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினான். தமிழில் கனல் தெறிக்க, பொறி பறக்க, விறு விறுப்பாக எழுதியது போலவே ஆங்கில மொழியிலும் "*பாலபாரதம்*' அல்லது "*யங் இந்தியா*" என்ற ஆங்கில வார இதழிலும் எழுதினான். "*விஜயா*" என்ற தமிழ் நாளிதழின் ஆசிரியராகவும் பாரதி இருந்தான். "*சூரியோதயம்*" என்ற வார இதழைத் தானே துவங்கி சிலகாலம் நடத்தி வந்தான். "*கர்மயோகி*" என்ற தமிழ் திங்கள் இதழ் பாரதியால் துவங்கப்பட்டது. வேதாந்த, சித்தாந்த, ஆன்மீக, நீதிக் கருத்துக்களை மக்களுக்குச் சொல்லுவதற்காகவே பாரதி இந்த இதழைத் துவங்கினான். பகவத் கீதையைத் தமிழில் தர பாரதி எடுத்துக் கொண்ட முயற்சிக்கு முன்வாசல் கதவை இந்த இதழே

திறந்துவிட்டது *சித்திராவளி*, *அமிர்தம்* என்ற பெயரில் இரண்டு பத்திரிக்கைகள் துவங்கப் பாரதி திட்டமட்டிருந்ததாகச் செய்திகள் கிடைக்கின்றன.

தேசியப் போராட்டத்தின் விளைவாக எழுந்த தமது உணர்வு களையெல்லாம் சக்தி மிகுந்த எழுத்துக்களால் பத்திரிகை உலகிலேயே ஒரு புதிய விழிப்புணர்வையும், எழுச்சியையும் உருவாக்கினான். பத்திரிகை உலகின் வழியாகத்தான் பாரதி தன்னை ஒரு கவிஞன் என்று வெளிப்படுத்திக் கொண்டான் என்றும் கூறலாம். பத்திரிகை தொழிலின் நுணுக்கங்கள், விந்தைகள், நீதி, நியாயத்தை மறந்துவிடாமல், தனக்கென்று சில தனி உத்திகளையும் பயன்படுத்தி எழுதினான். ஏடெடுத்துப் படிக்கத் தெரியாதவர்கட்கும் எழுத்தெண்ணிப் படிப்பவர்கட்காக வும் பாரதி பத்திரிகையில் எழுதினான் கவிதையில் கையாண்ட எளிய, இனிய, வேகமான நடையை உரைநடைத் தமிழிலும் பாரதி கொண்டு வந்தான்.

மக்களின் உணர்வுக்கேற்ப எழுதினான். மொழியெர்த்தான் கலைச்சொல்லாக்கம் செய்தான். புதிய சொற்களை உருவாக் கினான் பாரதி சாதாரண மக்களுடன் நேருக்கு நேர் நின்று பேசுவது போல பாரதி எழுதினான். ''புரட்சி'', ''யுகப்புரட்சி'' ''கிருதயுகம்'', ''பொதுவுடைமை'' போன்ற பல புதிய சொற்களை யும் எழுதிக் காட்டினான். பாப்பா, 'சின்ன'' ''குத்தல்'' போன்ற சாதாரண எளிய வழக்குகளையும் கூட வியத்தகு முறையில் அமைத்துக் கொடுத்தான். தென்றலின் சுகத்தையும், அதே போழ்தில் பொங்கிக் கரை புரளும் காட்டாற்றின் வேகத்தையும் புயலின் சுழற்சியையும், இடியின் முழக்கத்தையும், மின்னலின் வெட்டெனக் கொட்டும் சொற்களையும், கருத்துக்களையும் பாரதி யின் பத்திரிகைப் பணி சுவைத்தன.

தனது பத்திரிகைத் தொழிலில் அரசியலை மட்டும் பாரதி நம்பி எழுதவில்லை அதே போழ்தில் தேசியந்தான் தனது மூச்சு என்பதையும் மறக்கவில்லை ''ஊற்று நீர்க் கூவலில் உள்ளுறையும் மீனாக'' அல்லாமல் விடுதலை உணர்வுடன் பத்திரிகைத் தொழிலில் சுதந்திரமாகப் பாரதி ஈடுபட்டான். மோகன் தாஸ் கரம்சந்த்காந்தி,'' எனத் தமிழ்ப் பத்திரிகைகளெல்லாம் தவறாது எழுதிவந்த காலத்தில் மகாத்மா'' எனத் துணிந்து பாரதி எழுதினான். பல பக்கங்களில், பல ஆயிரம் சொற்களைக் கொண்டு விளக்க வேண்டிய அரசியல் நிகழ்ச்சிகளை அரைப்பக்கம் அரசியல் கருத்துப்படம் விளக்கிக் காட்டும் அரசியல் வித்தகத்தைத் தமிழ்ப்

பத்திரிகை உலகில் சிறப்பாகக் கையாண்டவன் பாரதி. அரசியல், பொருளாதாரம், சமுதாயச் சிக்கல், தமிழ்ப் பண்பாட்டுத் துறை, கலை, இலக்கியம் அனைத்திலும் தான் கொண்ட கருத்தைத் தைரியமாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எழுதிய முதற் பத்திரிகையாளன் பாரதி என்றால் அதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. பாரதியின் "ஞானரதம்" என்ற அழியா எழுத்து உலா வந்ததும் அவனது இந்தியா பத்திரிக்கையில் தான். இந்தியா பத்திரிகைக்காகப் பாரதி ஏற்படுத்தியிருந்தா சந்தா முறையைப் பார்த்தாலே பாரதியின் மனநிலையைத் தெளிவாய் புரிந்துகொள்ள முடியும். பத்திரிகை அனைவருக்கும் பொதுவான தாக இருக்கவேண்டும். நிதி மிகுந்தவர்கள், காசு நிறைந்தவர்கள், வசதி உள்ளவர்கள், வாங்கும் சக்தியுள்ளவர்கள், எனப் பல பகுதியாக மக்களைப் பிரித்துப் பொருளாதார நிலைக்கேற்பப் பத்திரிகை சந்தா அமைத்த பெருமை பாரதியையே சாரும்.

இந்தியா பத்திரிகையின் ஆண்டு சந்தா

அரசுக்கு ... ... ரூபாய் ஐம்பது

அரசர்களுக்கும் ஜமீன்களுக்கும் ... ... ரூபாய் முப்பது

மாதம் இருநூறு ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கட்கு... ரூபாய் பதினைந்து மற்றவர்களுக்கு ... ... ரூபாய் மூன்று

இந்தியா பத்திரிகைக்கு உலகத்தின் பல பாகங்களிலும் பத்திரிகை நிருபர்கள் இருப்பதற்குப் பாரதி ஏற்பாடு செய்திருந்தான் தமிழ் நாட்டில் எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் என்ற இலட்சியத்தைப் பத்திரிகைத் தமிழிலும் மறவாது பயன் படுத்தி வந்தான். இந்தியா பத்திரிகைக்குச் செய்திகளும், துணுக்குகளும் அனுப்பியவர்கட்கு அந்த நாளிலேயே தாராளமாகப் பணம் வழங்கும் நிலையைப் பாரதி உருவாக்கினான். ஒரு பத்திரிக்கை ஆசிரியன் தனது பத்திரிகை சிறப்பாக வெளிவருவதற்கு எத்தனை மொழிகளைக் கற்றுக் கொள்ள முடியுமோ அத்தனை மொழிகளையும் கற்றுக் கொள்ள வேண்டு மென்பது பாரதியின் திட்டம். தமிழ் எழுத்தாள னாகவும் இருந்து கொண்டு பத்திரிகையு நடத்துவதில் உள்ள அல்லல்களை எதிர் ஒலித்த மிகச் சிறந்த பத்திரிகையாளன் பாரதி.

"உங்கள் ஊர்களில் நடக்கும் அக்கிரமங்களைத் தைரியமாக எழுதுங்கள். உங்கள் பெயர்களை வெளியிடமாட்டோம்" என்ற உறுதி மொழியைத் தந்து கடைசி வரை யாரையும் காட்டிக் கொடுக்காமல் வாழ்ந்த தூய்மை மிகுந்த பத்திரிகையாளன் தான்

பாரதி. நாள்தோறும் தனது சொந்தப் பெயரால் மட்டுமன்றி "நித்திய தீரர்", "நிருபநேயர்" "உத்தம தேசாபிமானி" "சக்தி தாசன்", "காளிதாசன்", "ஷெல்லிதாசன்", "சாவித்திரி" போன்ற புனை பெயர்களிலும் பாரதி எழுதி வந்தான்.

இந்தியாவில் பத்திரிகைகள் தொண்டு என்ற நிலையிலிருந்து தொழில் என்ற நிலைக்குத் தாழ்ந்து போகின்ற போக்கைப் பாரதி இனங்கண்டு வெகுண்டான். மக்களின் தேவைகளையும் விருப் பங்களையும் புரிந்து கொண்டு பாரதி எழுதினான்,

எந்த சக்திக்கும், யாருக்கும் அஞ்சாது தனது எழுத்து வன்மை அனைத்தையும் பாரதி தனது பத்திரிகையில் காட்டினான். தன்னையும், தமிழகம் சேர்ந்த பாரதத்தையும், உலகத்தையும் மறவாது பாரதி எழுத்தில் நேசித்து. நாட்டுக் குழைக்கத் தேர்ந் தெடுத்த சக்தி மிகுந்த ஆயுதந்தான். அவனது பத்திரிகைத் தொழிலாக இருந்தது. மக்களிடையே நிலவி வந்த கருத்துக்களை மட்டும் தெளிவு படுத்துவதோடு அமையாது. அவர்கள் செய்ய வேண்டியவற்றையும் பாரதி சுட்டிக்காட்டினான். "தீப்பொறி", "காலவிளக்கு", "புதுமைகள்", "உலகநிகழ்ச்சிகள்", போன்ற தலைப்புக்களில் பாரதி பத்திரிகையில் எழுதி வந்த தலைப்புக்கள் இவற்றைத் தெளிவாக விளக்குகின்றது. "நமக்குத் தொழில் கவிதை; நாட்டுக் குழைத்தல்" என்ற பாரதியின் பணி வரம்புக்குப் பத்திரிக்கைத் தொழிலில் அவன் காட்டிய வீறு ஆழ்ந்த சிந்தனைக்கும், ஆய்வுக்கும், உரியதாக உள்ளது. இதனை உணர்ந்தே புரட்சிக் கவிஞர்.

அறிஞர் தம் இதய ஓடை
ஆழநீர் தன்னைக் கொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்"

எனப் பாடினார் போலும்.

மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தூண்டு கோலாகத் தொண்டுள்ளத்தோடு பணிபுரியும் பத்திரிக்கைகள் தமிழகத்தில் வளர வேண்டு மென்பதே பாரதிக் கவிஞனின் மகத்தான ஆசையாகும்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கதையாசிரியர்களும் உத்திகளும்

பேராசிரியர் **இரா. சண்முகவேலன்**
தமிழ்த்துறை,
அ. வீ. வா நி. புட்பங்கல்லூரி, பூண்டி.

கதையாசிரியர்கள் கலை, அறிவியல் ஆகிய இருபெரும் பிரிவு களுள் அடங்கியுள்ள இலக்கியம், வரலாறு, மானிடவியல், உளவியல் முதலிய துறைகளில் எதிலெதில் அறிவும் புலமையும் பெற்றுள்ளனரோ அவ்வவற்றை அடிப்படையான உத்திகளாகக் கொண்டு கதைகளை எழுதி வருகின்றனர். உதாரணமாக, காவியங்களிலிருந்தோ, புராணங்களிலிருந்தோ கருவையோ' கதைமாந்தரையோ எடுத்துக் கொண்டு அவர்கள் தம் கண்ணோட் டத்தில் கதைகளைப் படைப்பதைக் குறிப்பிடலாம். இவ்வாறு எழுதப்பெறும் கதைகளினுடைய இலக்கியச் சிறப்பினையே திறனாய்வாளர்கள் முதன்மையாகக் கருதிப் பழங்கதை உத்தி (Myth as technique) என்பர். கிரேக்க ஆதி கவியாகிய ஹோமரின் (Homer) இரண்டாவது காப்பியமான அடிஸ்ஸியை (The Odyssey) கதைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்ட ஆங்கில நூல்களில் புகழ் பெற்றதான *யுலிஸ்ஸிஸு"ம்*, பாரதத்தில் வருகிற யயாதியைக் கதை நாயகனாகக் கொண்டு படைக்கப் பெற்ற வி. ஸ. காண்டேகரின் *யயாதி* (1968) யும் இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். தமிழில் பாரதியின் 'அர்ஜுன சந்தேகம்', கௌதமன் — அகலிகையின் கதையினைப் புதிய சிந்தனையில் எழுதிய புதுமைப் பித்தனின் 'சாப விமோசனம்', அகல்யை' பி. எஸ். ராமையாவின் 'தொண்டர் நாதன் தூது', ஜானகிக்காக அல்ல', எம். வி. வெங்கட்ராமன் 'திலோத்தமை', 'இந்திராணி', கோ. வி. மணிசேகரனின் 'காதம்பரி' போன்ற சிறு கதைகளும், வ. வேணுகோபாலனின் *குண்டலகேசி* (1947), கோ. வி. மணிசேகரனின் *காந்தருவதத்தை* (1971) எம். வி. வெங்கட்ராமன் *நித்யகன்னி* (1975) முதலிய நாவல்களும் குறிப்பிடத்தக்கன.

இவ்வாறெல்லாம் பகுத்து ஆராய்கையில் கதையாசிரியனின் புலமைக்கும் அவன் கையாளுகின்ற உத்திகளுக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பு உள்ளது என்பதை அறிகிறோம்; அறிவோடு புலமை, உத்திகளின் வித்தாக இலங்குவதை விளங்கிக் கொள்கிறோம். வேறு வகையாகச் சொன்னால், கதை யாசிரியர்களின் புலமை அவர் தம் படைப்புக்களில் உத்தியாகச் (Scholarshipas technique) செயல்படுவதைக் காண்கிறோம்.

குறிப்புகள்

109. The aim of the writer may be to represent reality, but the medium he uses to do this is language, and there is no way in which happenings in the real world can be represented in language without distortion.
— Ian Milliom, The Novel in English, P. 16.

110. Joyce looked upon language as a sixth sense, that machinery through which the human organism reveals its inner processes an instinctive and therefore truthful comment on experience.
— B. R. Mullik, *English Literature*—Its Bachground and Development, P. 223.

111. டாக்டர் வே. சீதாலட்சுமி, *தமிழ்நாவல்கள்* (அகரவரிசை).

112. The short story is like Rosetti's sonnet "a moment's monument ... a memorial to a dead, deathless hour"... The short story has some affiliations with lyric poetry...
— J. N. Mundra and C. L. Sahni, *Advanced Literary Essays* P. 118.

113. வ. வே. சு. ஐயர், 'முன்னுரை', *மங்கையர்க்கரசியின் காதல்*, ப.v.

114. ஸுநீல் கங்கோபாத்யாய், 'முன்னுரை', *கவி*, ப. xiii.

115. சுஜாதா, 'ஒரு சந்திப்பு', *சாவி*, 18—7—82.

116. பொதுவாக மேற்கோள் காட்டும் உத்தி இரண்டு வகையான நோக்கங்கட்குப் பயன்படுகின்றது. ஒன்றுதான் கூற வந்த கருத்தை ஆதரித்து வலுப்படுத்தும் முகத்தான் பயன் படுத்தல்; இரண்டு கூறிவந்ததற்கு எதிரிடையான கருத்தாக இருந்தால் அதை மறுத்தல்.
— டாக்டர் இராம. பெரிய கருப்பன், ம. திருமலை, *ஜெயகாந்தனின் முன்னுரை இலக்கியம்*, ப. 93.

117. ந. சிதம்பர சுப்பிரமணியன், 'முன்னுரை, *மண்ணில் தெரியுது வானம்*, பக். xiv-xv.

கள்வரா ? களவரா ?

பி, எல். சாமி, இ. அ. ப (ஓய்வு)

அகநானூற்றில் வேங்கடத்தை ஆண்ட புல்லி என்ற மன்னன் கள்வர் கோமான் என்றழைக்கப்படுகின்றான். கள்ளர்கள் சிறு விலங்குகளை வேட்டையாட வளைதடியைப் பயன்படுத்தியதை ஒப்பர்ட் என்ற வெளிநாட்டு ஆராய்ச்சியாளர் விவரமாகக் கூறியுள்ளார். இந்த வளைதடியை இன்றும் கள்ளர் பழங்குடி மக்களிடம் காணலாம். சில சடங்குகளில் பூசைக்குரிய பொருளாகவும் கள்ளர் இதைப் பயன்படுத்துகின்றனர். வளைதடியை அனுப்பிப் பெண்ணைக் கொண்டு வரும் வழக்கம் கள்ளரிடையே இருந்து வந்தது. திருமணத்திற்கு முன் வளைதடியை இரு வீட்டாரும் மாற்றிக் கொள்வர். ''மறவர் கொடுப்பது வளரிப் பிரசாதம்'' என்ற பழமொழி உள்ளது.

இந்த வளைதடியை எறிந்தால் திரும்பி எறிந்தவனிடையே வந்து சேரும். ஆஸ்திரேலியாவிலுள்ள மிகப்பழங்குடிகள் பூமெராங் (Boomerang) என்ற ஒரு வகை வளைதடியை வேட்டையாடப் பயன்படுத்தினர்.

ஐங்குறுநூற்றில் வளைதடியைப் பற்றி ஒரு குறிப்பு உள்ளது.

''மாலை வெண்காழ் காவலர் வீச
நறும்பூம் புறவி னொடுங்குமுய லிரியும்''

— ஐங்குறுநூறு—421

மாலையைப் போன்று வெள்ளிய வயிரமுடையது வளைதடியைக் குறிக்கும். கள்ளர்கள் ஒரு காலத்தில் வேங்கடத்தில் வாழ்ந்தவர் என்றும் பின்னர் அவர்கள் தெற்கே வந்தனர் என்றும் கூறுவர். புதுக்கோட்டை மன்னர்களான தொண்டைமான்கள் இந்தக் கள்ளர் வகுப்பினரைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகின்றனர். கி. பி. 3 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி இந்தக் கள்ளர் குடியினரால் ஏற்படுத்தப்பட்டதென்று கூறுவர். ஆனால் களப்பிரர் அந்நியர் என்றும், பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவர். கள்ளரை முத்தரையர் என்றும் அழைத்தனர். இந்த முத்தரையர் இன்றும் புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்களில் அதிகமாக வாழ்கின்றனர். இவர்கள் கி. பி. 3 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ்நாட்டை ஆண்ட மும்முடி மன்னர்களையும் வென்று அவர்களையும்

சிறையில் இட்டார்கள் என்றும் இவர்கள் கள்ளர் குடியைச் சேர்ந்தவர் என்றும் கூறுவர். இந்தக் களப்பிரர் ஆட்சியை ஒடுக்கினவன் கடுங்கோன் பாண்டிய மன்னன் என்று வேள்விக் குடிச் சாசனம் கூறுகின்றது. கள்ளர் குலத்தைக் கள்வர் குலமாகக் கருதியது தவறு. தெலுங்கு மொழியில் 'களனு' என்ற சொல் போர் புரியும் குலத்தைக் குறிக்கும் அதனால் இவர்களைப் போர் புரியும் வீரர்கள் என்ற பொருளில் களவர்கள் என்று தான் அழைத்திருக்க வேண்டும். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் நண்டைக் குறிக்கக் கள்வன் என்று சங்க நூல்களில் எழுதப்பட்டது தவறு என்றும் களவன் என்று இருக்க வேண்டு மென்றும் பொருத்தமாகக் கூறியுள்ளார். இதுபோன்று கள்வரை களவர் என்றுதான் அழைக்க வேண்டும். ஆதலின் வேங்கடத்தை ஆண்ட மன்னன் பெயர் களவர்கோமான் என்றுதான் இருக்க வேண்டும். இந்த அரசன் வேளிர் குலத்தைச் சேர்ந்தவன் என்று மு. இராகவய்யங்கார் கூறியுள்ளார். வேளிர்கள் சிந்து வெளியிலிருந்து வந்தவர்கள் என்று ஐ. மகாதேவன், ஐ ஏ. எஸ். அவர்கள் எழுதியுள்ளார். புல்லி என்று வழங்கியிருக்கலாமென்று தெரிகிறது. புள்ளிப்புறா என்பதை புலிப்புறா என்று வழங்குவதைக் காணலாம். முற்காலத்தில் புலிஎன்று விலங்குக்குப் புள்ளியிருப் பதனால் புள்ளி என்றுதான் மக்கள் வழங்கியிருக்க வேண்டும். பின்னர் புலி என்று வழங்குகின்றது. புல்லி, புலி என்ற மன்னனின் பெயர்ச் சான்றே சிந்துவெளி நாகரிகத்தில் இருந்து வந்த வேளிர்கள் காலத்தைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டுகின்றது. சிந்துவெளி நாகரிகக் குறியீடுகளில் புலியுடன் போராடி வெல்லும் வீரர்களின் படம் காணப்படுகிறது. சுமேரியாவில் வாழ்ந்த கில்காமுஷ் (Gilgamush) என்ற வீரன் இரு சிங்கத்துடன் போரிடு வதாக உருவ முத்திரைகள் காணப்படுகின்றன சிந்துவெளி நாகரிகத்தில் இரண்டு புலிகளுடன் போரிடும் வீரன் உருவ முத்திரைகள் காணப்படுகின்றன. சிந்துவெளியிலிருந்து வந்த வேளிரின் சின்னத்தில் அடிப்படையாகப் பில்லி என்ற வேளிர் மன்னன் பெயர் இருந்திருக்கலாம் என்று கருதலாம்.

கள்ளர் மரபில் கரைகள் என்ற பிரிவுகள் காணப்படு கின்றன. வேங்கைப் புலிக்கரை, சறுப்புலிக்கரை, செம்புலிக்கரை என்று பெயர்கள் இருப்பதைக் காணும்பொழுது புலியினத்தார் புல்லியினத்தாராக இருந்திருக்க வேண்டுமென்று தெரிகின்றது. இந்த புலியினத்தாரின் மூதாதைத் தலைவனே புல்லி என்று கருதலாம். கள்ளர்கள் தமிழ்நாட்டை ஆண்ட காலத்திலே சிறுபாணாற்றுப்படை பாடப்பட்டதாக

இருக்கலாம். ஏனெனில் சிறுபானாற்றுப்படையிலே "வஞ்சியும் வறிதே, மதுரையும் வறிதே, புகாரும் வறிதே" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஆதலின், சிறு பாணாற்றுப் படை பாடப்பட்ட காலம் களப்பிரர் காலமாக இருக்கலாம். கள்ளர்களில் ஒரு குடியினர் முத்தரையர் என்றழைக்கப்படுவதற்குக் காரணம் மூன்று வேந்தர் களையும் அதாவது சேர, சோழ, பாண்டிய நாடுகளை, தரைகளை வென்று ஆண்டதையே குறிப்பிட்டதாகலாம். இந்த முத்தரையர் என்ற பெயர் கன்னட நாட்டுக் கல்வெட்டுக்களிலும் காணப் படுகின்றது. தஞ்சையில் மராட்டியர் ஆண்ட காலத்தில் கள்ளர்கள் ஒரு காட்டுப் பகுதியைக் கையகப்படுத்தி ஆண்டதையும் வரலாறு கூறுகின்றது. கள்ளர்கள் திருட்டுத் தொழில் புரிபவர் அல்லர் என்பதையும் அவர்கள் போர் வீரர்கள் என்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஆதலின் கள்ளர்களுடைய பெயர் கள்வர் என்று இருக்க முடியாது, களவர் என்றுதான் இருக்க வேண்டும்.

வாதவூரடிகளும் புதுவை ஆண்டாளும்

புலவர் த. சா. இராமராவ்,
திருவையாறு.

ஓம். அஸதோ மா ஸத் கமய
தமஸோ மா ஜோதிர் கமய
ம்ருத்யோர் மா ம்ருதம் கமய

''அஸத்திலிருந்து என்னை ஸத்துக்கு அழைத்துச் செல்
இருளிலிருந்து என்னை ஒளிக்கு அழைத்துச் செல்.
சாவிலிருந்து என்னைச் சாவாமைக்கு அழைத்துச் செல்''
என்று வேண்டுகிறது வேதம்.

எனவே, மனித உடல் பெற்ற ஒவ்வோர் சீவனும் ஸத்தை உணர வேண்டும். இம்மண்ணுலகும் இதன்கண் உள்ள சரம் அசரம் ஆகிய எல்லாப் பொருட்களும் ஒரு கால கட்டத்தில் அழியும் தன்மை உடையவை. அவை நிலையற்றவை. இக் காரணங்களால் அவை அஸத் எனப்படும். அந்த அஸத்தாகிய உலகினிடத்தும் அதன்கண் உள்ள பொருள்களிடத்தும் வைத்துள்ள பற்றினை ஒழித்தலும், என்றும் அழியாமல் ஒருபடித்தாய் நிலைநிற்கும் பரம்பொருளாம் தெய்வத்திடம் பற்று வைத்தலும் அவசியம். அதுவே உடம்பு பெற்றதன் உயர்ந்த பயன் ஆகும்.

இங்ஙனம் அழியாப் பொருளின் தன்மை உணர்ந்த ஓருயிர்க்குப் பரம் பொருள் ஒன்றே நிலையானது (ஸத்துப் பொருள்) என்னும் ஞான ஒளி பிறக்கும். அஃதுண்டாக நிலையற்ற உலகிலும் உடம்பிலும் கொண்டிருந்த பற்று தானாக விடுபட்டு விலகிநிலையான தெய்வத்திடம் திரும்பும். அஞ்ஞான இருளிலிருந்து விடுபட்டு மெய்ஞ்ஞான ஒளி பெற்று அவ்வுயிர் மிளிரும். இங்ஙனம் அனுபவத்தால் எழுந்த மெய்ஞ்ஞானமே மரண பயத்தை ஒழித்துப் பொன்றா நிலையாகிய அமரத்துவத்தைத் தரவல்லது. இஃதொழிந்த பிறவெல்லாம் அஸத் என்றும் இருள் என்றும், அழிவை உண்டாக்குவன என்றும் ஞான நூல்கள் பலபடியாகப் பேசுகின்றன. எனவே அவை விலக்கத் தக்கவையாகின்றன.

ஸத்தை உணர்ந்து ஒளிபெற்றுச் சாவாமையாகிய பெரு நிலையை எய்திய ஆன்மா அழியா இன்பத்தை, உலப்பிலா

ஆநந்தத்தை, எய்தி இன்புறுகிறது. இதுவே மோட்சம் அல்லது வீடு எனப்படுகிறது.

ந கர்மணா ந: ப்ரஜயா தனேன
த்யாகே னைகே அம்ருதத்வ மானஸு

என்று சாவாமைக்கு வழிவகுக்கிறது வேதம். "இவ்வுலகில் உழன்று பலகர்மங்களைச் செய்வதாலோ, குழந்தைகளைப் பெறுவதாலோ, செல்வத்தைத் திரட்டிக் குவிப்பதாலோ அமரத்வத்தை அடைய முடியாது. தியாகம் என்ற ஒன்றினால் தான் அதனை எளிதில் அடைய முடியும்'' என்பது இதன் பொருள். இங்ஙனம் பேசியதால் கர்மம் வேண்டாம், பிரஜைகள் வேண்டாம், செல்வம் வேண்டாம் என்பது கருத்தாகக் கொள்ளலாகாது: அவையெல்லாம் இன்றியமையாது வேண்டப்படுவனவே. ஆனால் தான் வாழ, தான் இன்பம் துய்க்க அவை வேண்டும் என்று எண்ணாது அவற்றைச் செய்யும் போதும் தேடும் போதும் தன்னை விடுவித்துக் கொண்டு இறைவன் சிந்தனையோடு இறைவனுக்காக என்றும் அவன் பணி என்றும் கருதி மேற்கொள்ள வேண்டும். தான் செய்யும் செயல் எல்லாம் இறைபணியாகச் செய்யப்படுவன என்றும் தன் செல்வமெல்லாம் அவன் செல்வம் என்றும் கருதும் மனப்பக்குவம் உண்டாதல் வேண்டும். தன்னை யழித்துக் கொள்ளும் மனப்பாங்குதான் தியாகம் என்று பேசப்படுகிறது. யான், எனது என்னும் இருவகைப் பற்றையும் அறுத்தெறிந்தால் சிவன்செயல், சிவார்ப்பணம் எனப்பேசும் மனோநிலை உண்டாகும். எல்லாம் அவனே, எல்லாம் அவன் செயலே என்ற எண்ணம் ஓங்கி வளரும். இவ்வெண்ணம் ஓங்கி வலுப்பெறும் அளவுக்கு வாழ்க்கைப் பயணத்தில் சந்திக்கநேரும் செயலறவு, தோல்வி, செல்வ அழிவு, துன்பம், மரணம் என்னும் இவற்றால் ஆன்மாவுக்குத் தளர்ச்சியோ கவலையோ தோன்றாது.

இந்தத் தியாகத்தைத் தான் கீதைப் பெருநூலும் "ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஸரணம் ஸ்ரஜ'' என்று பேசுகிறது. இந்த உண்மைநிலை கைவரப் பெறும் நிலையே ஞானநிலை என்றும், ஜீவன் முக்தநிலை என்றும் நூல்கள் கூறுகின்றன. திருவள்ளுவரும் ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும் என்று கூறி இதனையே நிலைநிறுத்துகிறார்.

இத்தகைய உயர்ந்த நிலையை ஞானநிலையை, ஜீவன் முக்த நிலையை எய்தியவர் திருவாதவூரில் தோன்றிய மாணிக்க வாசகர் அவர் பாடல்களில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

வான்கெட்டு மாருதம் மாய்ந்து அடில் நீர்மண் கெடினும்
தான் கெட்டல் இன்றிச் சலிப்பறியாத் தன்மையறக்கு
ஊன் கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டு என் உள்ளமும்
[போய்
நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

என்ற பாடலில் மேற் கூறிய அத்தனை கருத்துக்களும் எவ்வளவு தெளிவாகப் பேசப்பட்டுள்ளன என்பதை நாம் நோக்க வேண்டும். இதனால் வாதவூரடிகள் எய்திய மேலான நிலை நமக்குத் தெளிவாகப் புலனாகிறது அன்றோ ? மேலும்

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னை ஆட்கொண்ட போதே
கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மான்
நன்றே செய்வாய் பிழையே செய்வாய் நானோ இதற்கு
நாயகமே'

என்று பாடியதனாலும் அவர் எய்திய தியாகநிலை நமக்குப் புலனாகும். ''என் உயிர், உடல், பொருள் ஆகிய எல்லாவற்யையும் நீ என்னை ஆட் கொண்டபோதே உனக்கு உரியன ஆக்கிக் கொண்டு விட்டாயே. இனி எனக்கு என ஒன்று இவ்வுலகில் உண்டோ ? இல்லையே, அவற்றின் அழிவாலும் வளர்ச்சியாலும் எனக்கு வரும் இடையூறு யாது? எல்லாம் உன் தலைமை தானே.'' என்கிறார் மணிவாசகர்.

இதனையே ஆண்டாளும் தமது திருப்பாவை என்னும் நூலில்
''மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன் வாசல்
ஆற்றாது வந்து உன்னடி பணியுமா போலே கண்
போற்றியாம் வந்தோம் புகழ்ந்து.'' —எனப் பாடினார்.

செருக் கொழிந்து வலியிழந்து உன் பகைவர் உன்னடிபணிவது போலே யாமும் அகங்கார மமகாரங்களை ஒழித்து உன் திருவடியே புகலிடம் எனப் புகழ்ந்து பணிந்தோம்'' என்கிறார்.

இங்ஙனம் அகங்காரம மகாரங்களைத் துறந்து கர்மபலனை விரும்பாமல் இறைவன் ஒருவனையே வேண்டிநின்று அதற்காகவே

பலபடப் பாடிப்பாடிக் கசிந்து உருகியவர்கள் வாதவூர் அடிகளும் புதுவை ஆண்டாளும். தாம் நினைக்கும் எண்ணங்களுக்கும் செய்யும் செயல்களுக்கும் பயன் இறைவனே அவன் அருளே என்பது அவர் தம் கோட்பாடு.

> நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி வந்து
> செங்கமலப் பொற் பாதம் தந்தருளும்'' என

வாதவூரடிகளும்,

> "உன்னோடு, உற்றோமே யாவோம்
> உனக்கே யாம் ஆட்சி செய்வோம்
> மற்றை நம் காமங்கள் மாற்று''.

எனப் புதுவை ஆண்டாளும் பாடியிருப்பது காணத்தக்கது. இறைவனை யன்றிப் பிற பொருள்களையோ இன்பங்களையோ தாம் வேண்ட நேரிட்டால் அவை தமக்காக அல்ல வென்றும் பிறருக்காகவே (பரார்த்தமாக) வேண்டப்பட்டன என்றும் அவர்கள் கருதியதாகச் சான்றோர் வியாக்கியானங்களில் கூறியுள்ளனர்.

பக்குவம் அடைந்த ஆன்மா ஜீவபோத நிலையை இழந்து பரபோத நிலையை எய்தி, கேவல ஞான பரிபக்குவத்தை அடைந்த வுடன் அவ்வான்மா பெயரளவுக்கு உடம்போடு உலாவும் ஜீவன் முக்த நிலையிற் புகுந்து பேரானந்த வெள்ளத்தில் மூழ்கித் திளைத்திருக்கும். இதனையே மகாபாவம் என்பர் வேதாந்திகள். இத்தகைய மிகமிக உயர்ந்த நிலையை எய்திய வாதவூரடிகளையும் ஆண்டாளையும் நம்மைப் போன்ற சாதாரண மனிதரோடு எண்ணவோ பேசவோ கூடாது. எந்நிலையிலும் அது பொருந்தாது. அங்ஙனம் செய்யின் அது நம் அறியாமையே ஆகும்.

நாமெல்லாம் சம்சாரிகள் உலகத்தில் கட்டுண்டு உழல்பவர்கள்: தன்னைப் பற்றிய அறிவோ, இறைவனைப் பற்றிய அறிவோ இன்றி என்றும் அஞ்ஞானம் என்னும் பேரிருளில் (தமஸில்) மூழ்கி அதனின்றும் மீள வேண்டும், ஒளிபெற வேண்டும் என்ற அறிவும் முயற்சியும் இல்லாமல் சடம் போல் உறங்கிக் கிடப்பவர்கள். வாதவூரடிகளைப் போல் விழித்திருக்கும் ஆன்மாக்கள் அல்ல.

மச்சிந்தா மத்கதப்ராணா போதையந்த பரஸ்பரம் கதயந்தஸ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ரமந்திச என்றபடி ஜீவன் முக்த நிலையில் உள்ளவர்கள் உடல் உயிர் பொருள் என்பவற்றை அவனுக்காக்கி,

அவனையே தலைவனாக எண்ணித் தம்மனைய ஞானிகளைக் (தோழிகளை) காணும்போது அவன் குணங்களையே விளக்கிக் கொண்டும், அவனையே புகழ்ந்து பேசியும் பாடியும் மனநிறைவு கொண்டும் ஆநந்தப் பெரு வெள்ளத்தில் மூழ்கிக் களித்துக் கிடப்பர்.

இத்தகைய மகோன்னத நிலையை யடைந்த அவர்கள் உள்ளங்களிலிருந்து திருவெம்பாவை திருப்பாவை என்னும் இருபெரும் பனுவல்களும் வெளிப்பட்டுள்ளன. பக்தி நெறியில் ஒற்றுமையுடையராய்த் திகழ்ந்த இவ்விருவரும் வேறுவேறு வகையில் வேறுபட்டும் திகழ்கிறார்கள். ஆண்டாள் பூமிபிராட்டியின் அமிசமாய் இறைவன் ஆணையால் அயோனிஜையாய்ப் பிறந்த தெய்வமகள். பெரியாழ்வார் வளர்த்த பெண்கொடி சூடிக் கொடுத்த சுடர்க்கொடி. அதனால் தான் அவர் பிறந்தது முதலே மாலவற்கு என ஆட்பட்டு விட்டார். எனினும் மானிட உடல் தரித்த பிறப்பின், காரணமாய் வந்த பிரிவுத்துயர் அவரை வாட்டியது. மாதவனை எய்துதற்கு இடையறவும் இடையூறும் தோன்றின. அதனால் மாலவன்பால் மால் கொண்டு பேதுற்ற நிலையில் பித்தேறி அல்லும் பகலும் அவனையே எண்ணி எண்ணி அரற்றத் தலைப்பட்டார். இத்தகைய தெய்வப் பிறப்புடைய ஆண்டாளுக்கு ஆயர்பாடியில் ஆய்ச்சியர்கள் கண்ணனை எய்தக் கார்த்தியாயனி நோன்பை மார்கழித் திங்களில் நோற்றார்கள் என்ற பழஞ் செய்தி தெரிந்தது. ஆயர் மங்கையர் மேற்கொண்ட நெறியே தமக்கும் உகந்தது என எண்ணினார். மாலவற்கு ஆட்படும் தம் எண்ணம் நிறைவேறும் என்ற உறுதிப்பாடு பிறக்கத் தாமே இடைக் குலத்துச் சிறுமியாக மாறினார். மற்றைத் தோழியரோடு கூடி இப்பாவை நோன்பை நோற்பதாகக் கற்பித்து கொண்டு இம் முப்பது பாசுரங்களையும் பாடினார். தமது ஆற்றாமைக்குப் போக்கு வீடாகவும் பரமனை எய்தும் நெறியாகவும் இப்பாசுரங்கள் அமைந்தன.

ஆனால் மணிவாசகர் நிலையோ வேறானது. எளிய மானிடப் பிறவி வாய்க்கப் பெற்ற அவனை இறைவன் தானாக வலியச்சென்று திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் குருமூர்த்தமாய் எழுந்தருளிக் காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித் தன் தாள் தாமரை காட்டி நாட்டார் நகை செய்ய அவர் மேலை வீடெய்த வலிய ஆட்கொண்டான். கல்லைப் பிசைந்து கனியாக்கியது போலாயிற்று அவர் நிலை. அதனால் சித்தந்தெளிந்து பரபோதம் பெற்ற பெருஞானியாய்ப் பரமனையே பாடிப் பாடிக் கசிந்துருகும் பேரடியாராக மாறிவிட்டார். இத்தகைய ஞானச்

செருக்குடைய இவ்வள்ளலார் திருவண்ணாமலையையடைந்த போது மார்கழி மாதமாய்க் கன்னியர் பலர் பாவை நோன்பு நோற்பது கண்டார். கண்டதும் உள்ள எழுச்சி பிறந்தது. தம்மையும் அந்நோன்பு நோற்பவராகக் கற்பித்துக் கொண்டு இறையருளுக்கு ஏங்கித் திருவெம்பாவை என்னும் இவ்விருபது பாசுரங்களையும் பாடியருளினார். இங்ஙனம் இவ்விருவரும் பிறப்பின் தன்மையால் வேறுபட்டவராயினும் நூலியற்றிய தன்மையில் ஒற்றுமையுடையராவர். இருவர் நோக்கமும் இறைவனை, இறையருளை எய்தல் ஒன்றேயாக விளங்குகிறது. எனினும் உத்தம உபகாரிகள் செய்யும் காரியம் அவர்க்கு மட்டுமின்றி சன சமூகத்துக்கே பயன்படும் என்பது தொல்லோர் கண்ட உண்மை. அம்முறையில் இவ்விரு பாவை நூல்களும் நம்மை நமக்கு இரு கண்ணிற் பாவைபோல் ஒளிர்ந்து நமக்கு மெய்ப்பொருளைக் காட்டித் தருகின்றன. சைவ வைணவ ஒற்றுமைக்கு வழிவகுத்து நிற்கின்றன. "கண்ணிரண்டும் ஒன்றையே காண்" —என்றாற் போல இவ்விரு பாவை நூல்களும் ஒரு கருத்தின் அடிப்படையிலே எழுந்தவையே. இதனைக் கருதியே காஞ்சிப் பெருமுனிவரும் இவற்றைப் போற்றிப் பரப்பி வருகிறார்கள்.

இறைவன் குணக்கடலில் மூழ்கித் திளைத்துப் பேரின்பக்களிப் பெய்தி விழிப்புடைய ஆன்மாக்கள், இறைவுணர்வோ, அவன் குணானுபங்களோ சிறிதும் இல்லாமல் அஞ்ஞானம் என்னும் இருள்மலத்தில் மூழ்கிக் கிடக்கும் பாமரர்களைத் தட்டி எழுப்பி ஞானஒளி உண்டாக்குவதாகப் பாடப்படும். தத்துவமும் இந்நூலின் கண் அமைந்துள்ளது எனலாம். அஞ்ஞான மல இருளில் மூழ்கி முடங்கிக் கிடக்காமல் விழித்தெழுந்து எழுச்சி பெற்று இறைவன் அருள் வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து ஆநந்தம் எய்து மாறு உலக பந்தத்தில் கட்டுண்ட ஆன்மாக்களை அழைப்பதுவே பாவை நூலின் கருத்து என்பதை

மல விருளுற்று உறங்காமல் மன்னுபரிபாகர் அருள்
சல முழுக வருக எனப் செப்பல் திருவெம்பாவை

என்று திருப்பெருந்துறைப் புராணம் விளக்குகிறது.

பாவையர் நோற்ற பாவை நோன்பைப் பாவையாய்ப் பிறந்தாள் ஒருத்தி முப்பது பாசுரங்களாற் பாடினார். வாதவூரடிகளும் தம்மைப் பாவையாய்க் கற்பித்துக் கொண்டு இருபது பாக்களாற் பாடினார். இவ்விரு நூல்களையும் துருவித்துருவிப் பலபடியாக நுணுகி ஆராய்ந்து தெளிவு பெற்று மகிழ்வுறுவது நம்மனோர் கடமை.

இப்பாவை நோன்பின் பழமையும் அதற்கு ஆதாரமும், இதற்குரிய கிரிசைகளும் நோற்றற்குரிய காலமும், முறையும், பயனு மாகிய இவையிற்றை விளக்கப் புகின் இக்கட்டுரை எல்லை யில்லாது விரிந்து பெருகிவிடும் இவ்வளவில் அமைவது இப் போதைக்குச் சாலும்.

இவ்வளவு ஆழ்ந்த தத்துவங்களை அடக்கிக்கொண்டு மிளிரும் இந்நோன்பு இக்காலத்து எவ்வகையில் கொண்டாடப் படுகிறது என்பதை அறியப்புகின் அறிஞரானோர் உள்ளம் உடைந்து வருந்தி நிற்பர். மக்கள் அறியாமையை என் என்பது ! உண்மைப் பொருளை மறந்து கைவிட்டு விட்டு நிழலைப்பற்றிக் கொண்டு மயங்கிய நிலையில் நம் மக்கள் இன்று இந்நோன்பைக் கொண்டாடு கின்றனரே என்று அவர் வருந்துவர்.

இறைவனைத் தத்தம் உள்ளக்கோயிலில் எழுந்தருளப்பண்ணி இரவும் பகலும் இடையீடின்றி அவனினைவாகவே இருந்து வழிபடல் ஒவ்வொருவருக்கும் என்றும் கடமையாகும். இது தனி வழிபாடு அல்லது ஆத்மார்த்த பூசை எனப்படும் இங்ஙனம் எல்லா நாளும் இறைவனை மனத்தே வைத்துப் பூசித்து வரினும், மார்கழித் திங்களில் மதி நிறைந்த நன்னாளின் தாமும் மதிநிறைந்த வராகித் தம்மனைய அடியார் பலரோடும் கூடிப் பகவத் குணங் களை ஒருவர்க்கொருவர் எடுத்துப் பேசியும் பாடியும் களிக்க வேண்டும் என்பது நம்முன்னோர் அமைத்த அமைப்பு. இதனையே ஆண்டாள் "கூடியிருந்து குளிர்ந்து ஏலோர் எம்பாவாய்" எனப்பாடுகின்றார். சைவரும் இதனைக் கூட்டுக்கள் (பலர் கூடிக்களித்தல்) எனப்போற்றினர்.

இந்தத் தத்துவத்தை அறவே மறந்து அந்த மதி நிறைந்த நன்னாளன்று மதி குறைந்து அக்கார அடிசிலும், பல காய்களைக் கலந்து சமைத்த கூட்டும், இனிய களியும் செய்து உண்டு அதுவே திருவாதிரைக்களி என்றும் கூடாரவல்லி என்றும் மகிழ்ச்சியும் மனநிறைவும் எய்தும் சைவர் செயலையும் வைணவர் செயலையும் என்னென்று குறிப்பிடுவது !

மூட நெய்பெய்து பாற்சோறு முழங்கைவழி வாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்"

என்று ஆண்டாள் பாடிய குறிப்பைக் கொண்டு அக்கார அடிசிலமுதினைச் சமைத்து உண்டு அவ்வளவில் அமைதிபெறும் போக்கினை எண்ணினால் உள்ளம் வெதும்புகின்றது. "கூடி

யிருந்து குளிர்ந்து''என்ற தொடரும்''கூட்டுக்களி'' என்ற தொடரும் ''அடியாரோடு கூடிக்களிப் பெய்துதலையும், இறைவனோடு கூடி யிருந்து களிப் பெய்துதலையும்'' விளக்குகின்றன என்பதை முற்றும் மறக்கக் கற்றமையும், ''கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா'' என்பது திருப்பாவைப் பாசுரத்தின் முதற்குறிப்பு என்பதை மறந்து அதில் கூறப்பட்ட உணவுக்குக் (அக்கார அடிசில்) 'கூடாரவல்லி' எனப் பெயர் சூட்டியமையும், கூட்டுக்களி என்பது 'கூடிக் களித்தலைக் குறிக்கும் என்பதை மறந்து கூட்டும் களியும் சமைத்து உண்ணலாம் என்று பிறழ உணர்ந்தமையும் நினைக்க நினைக்க நல்லோர் உள்ளங்கள் வருந்தாமல் இரா, சிரிக்கத்தான் தோன்றும்! சரீரத்தை விட்டு அசாரத்தை (சக்கையை)ப்பற்றி கொண்ட இச்சிறுமை நீங்கி உண்மைநிலை தலையெடுக்க இறைவன் நம்மவர்க்கு நன்மதி நல்குவானாக. அந்த நன்மதிகொண்டு பாவை நூல்களைத் துருவிக் கற்று மகிழ்வோமாக.

உச்ச நீதிமன்றம்

புலமை. வெங்கடாசலம், எம். ஏ., பி. எல்.,
தஞ்சாவூர்.

உச்ச நீதிமன்றம் (Supreme Court) என்பது இந்தியாவின் தலைமை நீதிமன்றமாகும். இது, இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 130-இன் படி தில்லி (Delhi) யில் அமைந்துள்ளது. தலைமை நீதிபதி விரும்பும்போது குடியரசுத் தலைவரின் முன் அனுமதியுடன் இதன் இருப்பிடத்தை வேறு இடங்களுக்கும் மாற்றியமைக்க முடியும்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் :

உச்ச நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் மற்றும் ஏழு நீதிபதிகளையும் கொண்டிருக்கும். நாடாளுமன்றம் விரும்பினால் நீதிபதிகளின் எண்ணிக்கையை மேலும் உயர்த்தலாம். நாடாளுமன்றம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை, 1956-ஆம் ஆண்டில் 10 ஆகவும், 1960-ஆம் ஆண்டில் 13 ஆகவும், 1977-ஆம் ஆண்டில் 17 ஆகவும் உயர்த்தி, சட்டம் இயற்றியது.

உச்ச நீதிமன்றத்திற்கு நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றவர்கள் இந்தியக் குடிமக்களாக இருந்து, உயர் நீதிமன்றங்களில் ஐந்து ஆண்டுகள் நீதிபதிகளாக அல்லது 10 ஆண்டுகள் வழக்கறிஞர்களாகப் பணியாற்றியிருத்தல் வேண்டும். புகழ் வாய்ந்த சட்ட வல்லுநர்களும் சில வேளைகளில் இந் நீதிமன்ற நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் உண்டு. இவர்களைக் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கலந்தாலோசித்த பின்னரே தேர்ந்தெடுக்கிறார்.

பதவிக் காலம் மற்றும் ஊதியம் :

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 65 வயது வரையிலும் பதவி வகிப்பர். இவர்களுக்கான ஊதியம், இந்திய அரசியலமைப்புச் சட்டம், அட்டவணை II -இல் உள்ளபடி வழங்கப்படுகிறது. தேவைப்படும்போது இவர்களுக்கான ஊதியத்தை நாடாளுமன்றம் அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின் மூலம் மேலும் உயர்த்துகிறது.

ஆள் வரைகள் !

உச்ச நீதிமன்றம் மூன்று வகையான ஆள்வரைகளைப் (Jurisdiction) பெற்றுள்ளது. அவை :

1. முதலேற்பு ஆள்வரை (Original Jurisdiction)
2. மேல் முறையீட்டு ஆள்வரை (Appellate Jurisdiction)
3. கருத்துரை வழங்கும் ஆள்வரை (Advisory Jurisdiction) என்பன.

முதலேற்பு ஆள்வரை : (original Jurisdiction)

1. ஒன்று அல்லது மேற்பட்ட மாநில அரசுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே ஏற்படும் பிணக்குகள் ;
2. மத்திய அரசாங்கத்திற்கு எதிராக ஒன்று அல்லது மேற்பட்ட மாநில அரசுகள் இருவேறு அணிகளாக இருந்து எழுப்பும் பிணக்குகள் ;
3. இரண்டு அல்லது மேற்பட்ட மாநிலங்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகள் ஆகியவற்றைத் தீர்த்து வைப்பதற்கான ஆள்வரைகள் ஆகியன.

இத்தகைய ஆள்வரை உச்ச நீதிமன்றத்திற்கன்றி மற்றைய நீதிமன்றங்களுக்குக் கிடையாது.

மேல் முறையீட்டு அதிகாரம்

உயர் நீதிமன்றங்கள் அனைத்துக்கும் மேல் முறையீட்டு நீதிமன்றம் (Appellate Court) உச்ச நீதிமன்றமேயாகும். ஆகையால் உயர் நீதிமன்றங்களில் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குத் தொடர்பாக வழங்கப்படுகின்ற தீர்ப்புரை, தீர்ப்பாணை, கட்டளை ஆகியவைகளை எதிர்த்து எவரும் இந்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

கருத்துறை வழங்கும் அதிகாரம் :

குடியரசுத் தலைவருக்குச் சட்டம் அல்லது பொருண்மை (Fact) குறித்து ஐயம் ஏதேனும் இருந்து, அஃது உச்ச நீதிமன்றத்தின் மூலமாகவே தீர்க்கப்பட வேண்டிய நிலையில் முக்கியத்துவம் உடையதாக இருக்கும்போது, அவர் அது குறித்த ஆலோசனையை உச்ச நீதிமன்றத்திடம் வேண்டலாம். உச்ச

நீதிமன்றமும் அது குறித்த ஆலோசனையைத் தக்க முறையில் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கும்.

குடியரசுத் தலைவர் வேண்டிக் கொண்டதற்கேற்ப உச்ச நீதிமன்றம் ஆலோசனையை கட்டாயம் அனுப்பியே தீரவேண்டும் என்பதில்லை. அது ஆலோசனையை அனுப்பாமலும் இருக்கலாம். அதே போல் குடியரசுத் தலைவரும் தாம் வேண்டிக் கொண்டதற்கிணங்க உச்ச நீதிமன்றம் அனுப்பிய ஆலோசனையை ஏற்க வேண்டுமென்பதுமில்லை. அதை அவர் ஏற்காமலும் இருக்கலாம்.

சிறப்பு அமைதியின் பேரில் மேல்முறையீடு (Appeal by Special Leave) :

இந்திய அரசியலமைப்புச் சட்டம், இயல் (Chapter) நான்கில் யாது கண்டிருந்த போதிலும், இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் (Tribunals) ஆகியவற்றில் வழங்கப்படும் தீர்ப்புரை தீர்ப்பாணை, முடிபு மற்றும் தண்டணைகளை எதிர்த்துமேல் முறையீடு செய்ய உச்ச நீதிமன்றம் தமது உளத் தேர்வைப் (Discretion) பயன்படுத்திச் சிறப்பு அனுமதியளிக்கும்.

மதிப்புறுத்து நீதிமன்றம் : Court of Record) :

உச்ச நீதிமன்றம் தீர்ப்புகளின்சான்று ஆதாரங்களின் இருப்பிடமாகும். அதனாலேயே அது தாம் வழங்கிய தீர்ப்புகளை எவரும் அவமதிக்கும் போது, அவரை அது தண்டிக்கச் செய்கிறது.

உச்ச நீதிமன்றம் மேற்சுட்டிய அதிகாரங்களைத் தவிர, அரசியலமைப்புச் சட்டத்தில் கூறியுள்ள அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும்பொருட்டு ஆணைகளை வழங்கும் அதிகாரங்களையும் பெற்றிருக்கிறது.

துணை நூல்கள் :

1. Durga Das Basu, *Constitutional Law of India*, Prentice' Hall of India, Pvt., Ltd., New Delhi, 1983.
2. Dr. Jain Kagzi M. C., *Constitution of India,* Vol I & II Metropolitan Book Company, Pvt., Ltd., New Delhi, 1984.
3. Venkata Subba Rao, G.C. *Manual of Indian Constitutional Law*, Law Academy, Pvt., Ltd., Hydrabad, 1983.

அம்மையார் பாடியமூத்த திருப்பதிகங்களின் இசை

திருமதி. ஞானா குலேந்திரன்,
இணைப் பேராசிரியர், இசைத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

திருவலங்காட்டுப் பெருமானது தூக்கிய திருவடிக்கீழமர்ந்து பாடும் சிறப்புடைப் பேற்றினைப் பெற்றவர் காரைக்கால் அம்மையார். இவர் பாடிய அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலாங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு ஆகிய நான்கனுள், கடைசி இரண்டு பதிகங்களும் இனிய பண்களில் பாடப் பெற்றவை.

"கவுணியர் நாவுக்கரசர் பேயார் இம்மூவர் கற்கும் இயல் இசை வல்லோர்" என்கிறது சேக்கிழார் புராணம். இக் குறிப்பிலிருந்து சம்பந்தரையும் அப்பரையும் போல் அம்மையாரும் இயற்றமிழில் மட்டுமின்றி, இசைத்தமிழிலும் வல்லவர் என்பது புலனாகிறது. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய அப்பருக்கும் சம்பந்தருக்கும் காலத்தால் மூத்தவர் அம்மையார். ஆகவே, பண்ணார்ந்த பதிகப் பெருவழியால் இறைவனைப் பாடிப் போற்றும் திருநெறிய தமிழ் நெறியைத் தமிழகத்தில் முதன் முதல் தோற்றுவித்த அருளாசிரியர் அம்மையாரே என்பது விளக்கமாகிறது.

அம்மையார் பாடிய பண்கள் :

'எப்போதும் பாடுவாய் நம்மை' என்ற இறை அருளைப் பெற்றுப் பாடிய அம்மையாரது "கொங்கைதிரங்கி' என்ற முதற் குறிப்புடைய மூத்த திருப்பதிகம், நைவளம் என்ற நட்டபாடைப் பண்ணிலும், 'எட்டியிலவம்' எனத் தொடங்கும் இரண்டாம் பதிகம் இந்தளப் பண்ணிலும் பாடப் பெற்றவை.

இரு பதிகங்களுக்குமுரிய பண்களின் பெயர்கள் அறியப் பெற்றும், பதிகப் பாடல்களைப் பண்ணிசையில் பாடும் வழக்கு இன்று நடைமுறையில் அருகிவிட்டது. இந்நிலையில், தற்காலத்தில் பாடப்பெற்று வரும் மூவர் (அப்பர், சம்பந்தர், சுந்தரர்) தேவாரப் பண்களின் இசைமுறையினைத் துணைக் கொண்டு அம்மையார் பாடிய பண்களின் இசையினைத் தெரிந்து கொள்ளலாம்.

நட்டபாடை, இந்தளப் பண்களில் அமைந்த தேவாரப் பதிகங்களும் அவற்றின் இசைமுறையில் அம்மையார் பாடல்களும் :

சம்பந்தப் பெருமானின் முதல் திருமுறையில் 1 முதல் 22 வரையான பதிகங்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகளது ஏழாந்திருமுறையில் 78 முதல் 82 வரையான பதிகங்களும் நட்டபாடைப் பண்ணில் அமைந்தவை.

சம்பந்தப் பெருமானின் இரண்டாந் திருமுறையில் 1 முதல் 39 வரையான பதிகங்களும், அப்பர் சுவாமிகளது நான்காந் திருமுறையில் 16, 17, 18 ஆம் பதிகங்களும், ஐந்தாம் திருமுறையில் 100 திருக்குறுந்தொகைப் பதிகங்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகளது ஏழாந்திருமுறையில் 1 முதல் 12 வரையான பதிகங்களும் இந்தளப் பண்ணிற்கு உரியவையாகின்றன.

பழந்தமிழர் கண்ட நூற்று மூன்று பண்களில் இன்று இருபத்து மூன்று பண்களுக்குரிய தேவாரப் பாடல்ளே பாடப் பெறுகின்றன. இப்பண்களின் இசையினை அவ்வப் பண்களுக்கு நேரான கருநாடக இராக முறையினைக் கொண்டே இனங்காணப்பட்டும் வருகின்றது.

இந்தவகையில், நட்டபாடைப் பண்ணிற்குரிய இராகம் நாட்டையாகவும், இந்தளப் பண்ணிற்குரிய இராகம் மாயா மாளவகௌளை என்றும் ஏற்கப்பட்டுத் தேவாரப் பாடல்கள் பாடப் படுகின்றன.

ஆக, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களில் நட்டபாடைப் பண்ணிற்குரிய முதற் பதிகப் பாடல்கள் நாட்டை இராகத்திலும், இந்தளப் பண்ணிற்குரிய இரண்டாம் பதிகப் பாடல்கள் மாயாமாளவகௌளை இராகத்தில் பாடுவதும் ஏற்புடையதாகிறது. தேவாரங்களுக்குக் கட்டளைகள் அறியப் பெற்றமை போல் அம்மையார் பதிகங்களுக்குக் கட்டளைகள் அறியப் பெறவில்லை. கட்டளைகள் என்றால் சந்தவேறுபாடுகள் எனக் கொள்ளலாம். தேவாரப் பதிகங்களில் நட்டபாடைப் பண்ணும், இந்தளப் பண்ணும் கொள்ளும் கட்டளைப் பகுப்பில் மூத்த திருப்பதிகப் பாடல்களுக்குப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்திப் பாடுவது தவறல்ல. கட்டளையின் அமைப்பே பாடலின் தாள அமைப்புமாகிறது.

தேவாரப் பதிகங்களில் சில சுந்தாங்கமாகவும், சில பண்ணாங்கமாகவும் பாடப் பெறுகின்றன. வரையறுத்த தாளக் கட்டுப்பாடுகள் இல்லாமல், பாடுபவர் தம் உணர்ச்சிப்

பெருக்குக்கும் கற்பனை வளத்திற்கும் ஏற்பப் பாடலைக் குறித்த பண்ணின் இசை வடிவத்திற்கு அமைய, இசையை விரித்தோ சுருக்கியோ பாடுவது சுத்தாங்க முறையாகும், கட்டளைப் பகுப்பு அல்லது சந்த அமைப்பினைக் கொண்டு ஒரு தாளக்கட்டுப்பாட்டுள் அமையப் பாடலைப் பாடுவது பண்ணாங்க முறையாகும். நல்ல சந்த நயத்தோடு பாடல்கள் பாடிய சம்பந்தப் பிள்ளையார் கைகளில் எப்பொழுதும் பொற்றாளம் இருந்தது போல், அம்மையார் கைகளிலும் தாளங்கள் 'இருந்ததைக் கோயில்களிலுள்ள அம்மையாரது சிற்பப் படிமங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆகவே அம்மையார் பதிகங்கள் பண்ணாங்கமாகப் பாடற்குரியவை என்பதும் தெளிவாகிறது.

தென்னக இசைக்கு அம்மையாரின் பங்களிப்பு

அம்மையார் பாடிய நட்டபாடைப் பண்ணில் "தோடுடைய செவியன்" எனச் சம்பந்தர் தமது முதற் திருப்பதிகப் பாடல்களைப் பாடினார். இதே போல், 'பித்தா பிறை சூடி' எனச் சுந்தரர் பாடிய முதற் திருப்பதிகமும் அம்மையார் பாடிய இந்தளப் பண்ணில் பாடியிருப்பது மனங்கொளத்தக்கது.

அம்மையார் காட்டிய வழியைப் பின்பற்றித் தேவார நாயன்மார்களால் பிரபல்யப்படுத்தப்பட்ட இவ்விரு பண்களும், பிற்காலத்தில் நாட்டை என்றும், மாயாமாளவ கௌளை என்றும் அழைக்கப் பெற்றுக் கருநாடக இசையில் மிக்க சிறப்பு நிலை எய்தியிருக்கின்றன.

தற்காலத்தில் கோயில் இசையிலும், அரங்க இசையிலும் நாட்டை இராகம் மிக முதன்மை பெறுகிறது. கோயில்களில் சுவாமி புறப்பாட்டின்போது 'மல்லாரி' இசைப்பதற்கும், இசை, நாட்டிய, கதாகாலட்சேபக் கச்சேரிகளின் தொடக்கத்தில் நிகழ்ச்சி 'களை கட்டவும்', மங்களகரமாக அமைவதற்கும் நாட்டை இராகம் மிகப் பொருத்தமான இசையாக ஏற்கப்படுகிறது.

மாயாமாளவகௌளை இராகமும் தமிழிசையானது கருநாடக இசையென அழைக்கப் பெற்ற காலம் முதல் சிறப்பிடம் பெற்று வருகிறது. தென்னக இசை பயிலத் தொடங்குவோருக்கான சுரவரிசைப் பயிற்களுக்கு மாயாமாளவ கௌளை இராகமே ஏற்றதாக முன்னோர்கள் வகுத்துத் தந்துள்ளனர். இதனால் மாயாமாளவ கௌளை இராகம் தெரியாத இசையாளர் எவருமே தென்னகத்தில் இல்லை என்றும் சொல்லலாம்.

மதிப்புரை

[இயேசுபிரான் பிள்ளைத்தமிழ் : ஆசிரியர் பாவலர் அருள் செல்லத்துரை, விலை ரூ 12. வெளியீடு : அருள் வாக்கு மன்றம் தூய சின்னப்பர் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 001]

'பிள்ளைத் தமிழ்' என்னும் சிற்றிலக்கியத்திற்கு வித்திட்டு பத்தி நெறியில் மலரச் செய்தவர் பெரியாழ்வாராவர். மாயோனைச் சேயாகப் பெற்ற யசோதையின் கொஞ்சுமொழியும், கெஞ்சு மொழியுமாக அவர் வழங்கிய பிள்ளைப்பருவ நிலைகளையும் இலக்கிய உத்திகளையும் அடிப்படையாகக் கொண்டு பாட்டியல் நூலோர் வகுத்தமைத்த இலக்கணத்தை ஒட்டி எழுந்த இவ் இலக்கிய மரபு தொடக்கத்தில் தெய்வக் குழவிகளையும் பின்னர் அரசர்களையும் பிற்காலத்தே பிற பெருமக்களையும் பொருளாகக் கொண்டுள்ளது.

சமயச் சான்றோர் தத்தம் இறைநெறி உண்மைகளை இவ் இலக்கிய வாயிலாகப் புலப்படுத்தக் குழவிப் பருவத்துக்குரிய தெய்வங்களை எண்ணியபோது வைணவத்திற் கண்ணனும் சைவத்தில் முருகனும் அவர்தம் கருத்திற்குரியராயினர். புராண வரலாற்றுள் வரும் பெண்பால் தெய்வங்களும் சிறுபான்மை குழவி நிலையில் அமைவனவாயின.

முருகன் குறிஞ்சிநிலத் தெய்வமாய்த் தமிழ்க்கடவுளாய், தமிழைத்தந்தவனாய் விளங்குகின்றான் என்னும் சமயக் கோட் பாட்டின் அடிப்படையில் முருகனைப் பற்றிய பிள்ளைத் தமிழ் மிக்குத் தோன்றுவனவாயின. முருகனைத் தமிழ் உருவமாகக் கொண்டமையான் தமிழ்மொழியின் பல்வேறு நிலைகளையும் சிறப்புகளையும் அப்பிள்ளைமையொடு இணைத்துப் பெரும்பாலோர் பாடியுள்ளனர். இவ் வழக்கினை நிலைபெறுத்தியவர் குமரகுருபர அடிகள் எனலாம்.

அம்மரபுகள் காரணமாகத் தாம் தாம் போற்றி ஒழுகும் தெய்வ நாயகரைக் குழவி பருவத்தராய் ஆக்கிப் பிள்ளைத்தமிழ் பாடுங்கால் தமிழ் மொழியையும் தமிழ்நெறி மரபுகளையும், அத் தெய்வங்களோடு இணைத்து நற்றமிழ்ப் புலவோர் நவில்வாராயினர்.

சமயநெறிகளைச் சார்ந்தவராயினும் சாரதவராயினும் தமிழ்ப் புலமையுடையராயின் சங்க இலக்கியம், திருக்குறள், காப்பியங்கள் இதிகாசங்கள் ஆகியவற்றுள் காணப்பெறும் சிறந்த

கற்பனைகளையும் உவமக்கோட்பாடுகளையும் தத்தம் புலமைக்கும் அறிவாற்றலுக்கும் ஏற்ப அவ்வக்காலச் சூழ்நிலைகளொடு அமைத்துப்பாடுவராயினர்.

அம்மரபு நெறிகட்கு முரணாமல் இவ் இயேசுபிரான் பிள்ளைத் தமிழ் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. தேவகுமாரன் மானுடனாகத் தோன்றிக் குழவிப்பருவமுதலாக நிகழ்த்திய தெய்வீக விந்தைகளையும் மன்பதை உய்யக்காட்டிய நெறிகளை யும் அருள் மொழிகளையும் தக்க இடங்களிற் பொருத்தமாக அமைத்து இலக்கியநயத்தொடு காட்டி இந்நூலாசிரியர் படைத் துள்ளமைப் பாராட்டற்பாலது பயின்று சுவைத்தற்குரியது.

அம்புலிப் பருவத்துள் நால்வகை உபாயங்களை அமைத்துப் பாடியுள்ள திறம் இவர் தம் பாப்புலமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. கனிவமைந்த இனிய செந்தமிழ்ச் சொற்களால் புனையப் பெற்றுள்ளமையின் சமய வேறுபாடு கருதாமல் யாவரும் பயின்று உவக்குமாறுள்ளது.

சந்த அமைப்பிற் சிறிது கவனம் செலுத்தியிருக்கலாம். முகப் போவியத்துள்ள குழந்தையமைப்பும் மயிலும், சேவலும், முருகக் கடவுளை நினைவூட்டுகின்றன. பொதுப் பட அமைத்திருக்கலாம்.

அருஞ்சொற்பொருள், மேற்கோள், நூற்சிறப்பு என்னும் தலைப்பிற்காணும் விளக்கம் ஆகியவை பயிலுவோர்க்குப் பெரிதும் துணைபுரிவன. கிறித்து சமய அன்பர்களும் தமிழ்ச்சுவைஞரும் பயிலத்தக்கதொரு இலக்கியத்தைப் படைத்த ஆசிரியரைப் பாராட்டுகிறோம்.

பதிப்பாசிரியர்

பேராசிரியர் சாலை. இளந்திரையன்,
இயக்குநர் : தமிழியல் ஆராய்ச்சி மய்யம்,
பேரவை இல்லம், கோபாலபுரம்,
சென்னை - 86.

கனக சுப்புரத்தினப் புரட்சிக் கவிஞரை நினைக்கும்தோறும், - அவர் படைப்பின் பல கருத்துக்கள், ஒன்றையொன்று முந்திக் கொண்டு நம் இதயத்தில் எழுகின்றன. சாதி, மத, மூடநம்பிக்கை ஒழிப்பு, - தொழிலாளர் நலன், - பெண்ணுரிமை, - தமிழ் எழுச்சி போன்ற அந்தக் கருத்துக்களில் எது அவருடைய உள்ளத்தில் விஞ்சி நின்றது என்று பட்டிமண்டபம் நடத்திப் பொழுதைப் போக்குவதைவிட, - அவை ஒவ்வொன்றிலும், கவிஞர், எந்த அளவு புரட்சி முனைப்பைக் காட்டினார் என்று கணித்துப் பயனடைவதே நல்லது. அந்த வகையில், அவர் எழுப்பிய தமிழ் உணர்ச்சியைப் பற்றி இங்கே சில வரிகள் ...

இரண்டு பின்னணிகள்

தாய்மொழிப்பற்று என்பது எந்த இன மக்களுக்கும் இயல்பானதே; தமிழ் மக்களும் அந்தப் பற்று உடையவர்களே. ஆயினும், - உலகின் பல இன மக்களுக்கு இல்லாத ஒரு வரலாறு,- சமயச் சார்புகள் அற்ற சங்க இலக்கியம் படைத்த வரலாறு தமிழ் மொழிக்கு இருப்பதால், - பின்னால் வந்த தமிழ்ப்புலவர்கள், தமிழைப் போற்றிப் பாராட்டுவதிலேயே ஓர் இன்பத்தைக் கண்டிருக்கிறார்கள். ஆனால் திருவிளையாடல் போன்ற புராணங்களிலும் கம்பன் போன்ற காவியங்களிலும் தமிழலங்காரம் போன்ற சிறு பிரபந்தங்களிலும் உள்ள தமிழ்ப் புகழ்ச்சியையும் புரட்சிக் கவிஞரின் முழக்கத்தையும் வேறுபடுத்திக் காண வேண்டும்; முன்னவர்களின் தமிழ்ப் புகழ்ச்சிக்கு உந்துதலாக இருந்த பின்னணியையும் புரட்சிக்கவிஞரின் தமிழ்ப் புகழ்ச்சிப் பின்னணியையும் அவ்வாறே வேறுபடுத்திக் காணவேண்டும்.

முந்தியவர்கள் காலத்தில், 'ஆரியம் - தமிழ் என்னும் இரண்டு மொழிகளில் எது உயர்ந்தது?' என்ற படிப்பாளர் வட்டாரச் சர்ச்சை ஒன்று இருந்துவந்தது; வடமொழியாளர்கள் 'தங்கள் மொழி கடவுளால் படைக்கப்பட்டது. என்று கதை மகத்துவம் பேசினார்கள்; அதை எதிர்த்து மறுக்க விரும்பிய அக்காலத் தமிழ்ப் புலவர்கள், ''கடவுள்களெல்லாம் சங்கத்தில் கூடி இருந்து ஆராய்ந்த பெருமை உடையது எங்கள் தமிழ்'' என்று போட்டிக்கதை கட்டினார்கள்,

புரட்சிக் கவிஞர் வாழ்ந்த காலத்தின் நிலை முற்றிலும் வேறு வடக்கின் புராணங்களையும் கடவுள்களையும் தாராளமாக நுழைய விட்டதால், இங்கே தமிழ்வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் கலப்பட நோயும், வடமொழி - பிறமொழி முதன்மை என்ற தொல்லையும் அளவுமீறி ஆட்டம் போடத் தொடங்கிவிட்ட காலம் புரட்சிக்கவிஞர் காலம். எனவே, இவர், சுப்பிரமணியக் கவிஞர் போல, வெறும் தமிழ்ப் புகழ்ச்சியாளராக மட்டும் நின்றிடாமல், - தமிழின் பாதுகாப்புக்கு ஒரு படையே திரட்ட வேண்டியிருந்தது. இதனாலேதான் புரட்சிக்கவிஞரின் தமிழுணர்ச்சிப் பாட்டு, எங்கும் எதிலும் தமிழையே மீட்டுக் காண விழையும் ஒரு தமிழ் எழுச்சி வெள்ளமாகப் பொருகிப் புறப்படுகிறது.

பொங்கிப் பொங்கி ... !

தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமை குன்றிப் போனார்கள் என்பதை விளக்கும் விதமாகத், 'தமிழர்கள் நெல்லிக்காய் மூட்டைகள்' என்னும் ஒரு வழக்கும் ஏற்பட்டிருந்தது. இந்த ஒற்றுமையின்மையைக் கிள்ளிக் களைந்தால், இங்கே பயனுள்ள செயல்கள் நடைபெற முடியும் என்று தெளிந்த புரட்சிக்கவிஞர், அந்த நெல்லிக்காய் மூட்டைகளையே ஒன்றுபட்ட கூட்டமாகக் காட்டத் தூடித்தார் ; பாட்டுப் புறப்பட்டது.

வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம் ; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே, — மற்று
உடலினால் பலராய்க் காண்பார் !

புரட்சிக்கவிஞர் பாட்டிசைக்கத் தொடங்கிய (1930-35) காலக் கட்டத்தில் மிகுதியான தமிழர்கள் எங்கே திரண்டிருப்பார்கள் என்றால், - கோயில் திருவிழாக்களிலேதான் திரண்டிருப்பார்கள். அவர்கள் வீரங்கொள் கூட்டமாக இருக்க முடியுமா? ஒரு பட்டாசு பெரிதாக வெடித்தால் கூடத் திசைக்கு ஒன்றாய்ச் சிதறி ஓடுவது அல்லவா திருவிழாக் கூட்டம்! அவர்களை 'உள்ளத்தால் ஒருவர்' என்றுதான் எப்படிக் கூறமுடியும் ?

கவிஞர் தமிழர்களைப் பார்த்து 'வெள்ளம்' என்றதும் 'வீரம்' என்றதும் வெறும் ஆசைக் கற்பனைகளே என்பதை அடுத்துவரும் அடிகளிலேயே காட்டிவிடுகிறார்.

'கள்ளத்தால் நெருங்கொணாதே'
என வையம் கலங்கக் கண்டு
துள்ளும் நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும் நாள் எந்த நாளோ?

ஆமாம்; தமிழர்கள் வெள்ளம்போல் திரண்டவர்களாகவும், உடலால் பலரும் உள்ளத்தால் ஒருவருமாகவும் இருந்திருந்தால், கள்ளத்தால் இவர்களை நெருங்க முடியாது என்று எண்ணி மற்றவர்கள் விலகி நின்றிருப்பார்கள்; இங்கே கள்ளம் கடைவிரித்த வரலாறே நிகழ்ந்திருக்க முடியாது. அப்படி இல்லாமல்,- "வந்தோன் எவன்? அவனை ஏன் நம்பவேண்டும்? என்று துரும்பேனும் நினையாமல்" ('தமிழச்சியின் கத்தி'), வந்தவனுக்கெல்லாம் வாயிலைத் திறந்து வைத்ததால்தான் "தூய்தமிழன் துயருற்றான், வந்தோர் வாழ்ந்தார்!" இந்த நிலை இனியேனும் மாறவேண்டும்; தமிழர்கள் ஒன்றுபட்ட வெள்ளமாக உயர வேண்டும்; அது கண்டு வையம் கலங்க வேண்டும் என்பதே புரட்சிக் கவிஞரின் ஏக்கம்.

இந்த ஏக்கத்தை ஏற்படுத்திய அக்காலச் சூழ்நிலையை ஒவ்வோர் அடியிலும் சித்திரித்துச் சீறுகிறார் கவிஞர்:

மணக்கவரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது
தமிழ்நாட்டின் தமிழ்த்தெருவில்
தமிழ்தான் இல்லை!

நாடு தமிழ்நாடு; ஊர் தமிழ் ஊர்; அங்கு வாழும் மக்களும் தமிழ் மக்கள். ஆனால், அந்தத் தமிழ்நாட்டுத் தமிழரின் தமிழ்த் தெருவிலே தமிழ் இல்லை. எத்தனை கொடுமை இது! இந்தக் கொடிய பின்புலத்தில் வெம்பிச்சாம்பி வீறியதாலே தான்,- கவிஞரின் உள்ளம்,-

தெலுங்கு தமிழ்நாட்டினில் ஏன்?
செத்த வடமொழிக்கு இங்கே
என்ன ஆக்கம்!

என்று வெடித்துக் குமுறுகிறது, குமுறி அனல் கக்குகிறது.

தமிழின் அழகைப் பாடுவதிலோ, அதன் பெருமையை பாடுவதிலோ புரட்சிக் கவிஞர் மற்றெவர்க்கும் சளைத்தவரல்லர்: 'இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது!' என்றும், - 'தமிழ் எங்கள் இளமைக்குப் பால், இன்பத் தமிழ் நல்ல புலவர்க்கு வேல்!' என்றும், - "தமிழெங்கள் உயிரென்பதாலே, வெல்லும் தரமுண்டு தமிழருக்கு இப்புவி மேலே!" என்றும் அவர் அடுக்கும் போது, எந்தத் தமிழனும் நிமிர்ந்து உட்காருவான். ஆனால், சொக்கு இன்பம் நல்கும் அந்தப் பொதுப்

புகழ்ச்சியைத் தாண்டிய செயல் சிந்தனைகளை எழுப்ப வேண்டிய காலம் கவிஞர் வாழ்ந்த காலம். அதனாலேயே, 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை!' என்றும், 'தமிழுக்குப் பகையானோர் வாழ்வதெங்கே? சங்காரம் நிசமென்று ஊதுஊது சங்கே!' என்றும், உணர்ச்சியை வெள்ளமாகப் பெருக்குகிறார் கவிஞர்.

எல்லை மீறி எறி

மட்டுமா? கடவுளை வெறுத்தவர், வழிபாட்டை வெறுத்தவர் கவிஞர். அதை எல்லாம் மறந்துவிட்டுத் தமிழையே தாய்த் தெய்வமாக்கி வழிபடும் அளவுக்கு, அவரையும் மீறிப் பொங்குகிறது தமிழ் உணர்ச்சி!

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே!
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரனின் வீரமும் வெற்றியும் நீயே!

வழிபாட்டு அளவில் மட்டுமல்ல; மதவாணர்கள் நெறியிலேயே கூடப்பாடத் தொடங்கி விடுகிறார் கவிஞர்:

நகும்படி ஓர் தமிழறிஞன் தமிழர்க்கு இன்னல்
நாடுவனேல் அவ்வறிஞன் முட்டாளாவான்!
இகழ்மிக்க ஒருமுட்டாள் தமிழர்க்கு இன்னல்
எண்ணானேல் அம்முட்டாள் அறிஞனாவான்.

எப்படி இருக்கிறது மதிப்பீடு? 'அறிஞன் யார், - முட்டாள் யார்?' என்ற கேள்விக்குரிய பதிலே, தமிழுணர்ச்சி வெள்ளத்தில் அடிபட்டு சரிந்து விடுகிறது!

சாதியால் ஒழுக்கத்தால்
மிக்கோரேனும்
சதுர்மறையால் வேள்வியால்
தக்கோரேனும்,
போதில் நான்முகன் பணியப்
பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார்
புலையர்தாமே!

என்கிறார் திருமால் அடியார் ஒருவர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

உரை : கேட்போரை ஆராயுமிடத்து மேல் முன்னத்தின் எடுத்து மொழிதற்குரியார் எனப்பெற்ற அப்பதின்மரே தலைவன் தலைவியின் கூற்றுக்களைக் கேட்போராவார். தலைவன் தலைவியர் தம்முட் கேட்போராவார் என்றவாறு.

'நினையுங்காலை' என்றதனான் கூற்றுப் பற்றி ஓதிய இலக்கணங்களான் விதிவிலக்குகளை ஓர்ந்தறிந்தறிந்து கொள்க சிறப்பு விதிகள் பற்றி மேற்கூறுவார்.

சூ. 197 : பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே

கருத்து : கேட்போர் பற்றிய சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : யாப்பொடு புணர்ந்து நிகழ்தலானே பார்ப்பார் அறிவர் என்று சிறப்பித்துக் கூறப்பெறும் இவ் இருவர் கூற்றும் யாவர்க்கும் கேட்டலைவரையார். யாவரும் இவ் இருவர் கூற்றுக்களுக்குக் கேட்போராவார் என்றவாறு.

அவர் கூற்று அறமுதலாகிய மும்முதற்பொருளொடும் புணர்ந்துவரும் இயல்புடைத்தாகலின் யாவரும் கேட்பார் என்றவாறு

யாப்பென்றது—அற முதலாகிய நூல்களை.
புணர்தலான் என்பது புணர்ந்தென விகாரப்பட்டு நின்றது.

சூ. 198 : பரத்தை வாயில் எனஇரு வீற்றும்
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே.

கருத்து : இதுவும் கேட்போர் பற்றிய சிறப்பு விதி கூறுகிறது.

உரை : பரத்தையர் வாயில்கள் என்னும் இரு பகுதியாரும் தலைவியைக் கேட்பாளாகக் கருதிக் கூறாத கூற்றுகள் அகப் பொருட் பயனில்லாதவையாகும். சுட்டிக் கூறுதலாவது தலைவி கேட்பாளாகத் தலைவிக்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை கூறுதல். வாயில்கள் முன்னிலைப் புறமொழியாகக் கூறுதல்.

சூ. 199 : வாயில் உசாவே தம்முளும் உரிய

கருத்து : வாயில்கள் கற்றுக்குச் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : தலைமக்கள் கேட்பக் கூறுதலேயன்றி வாயில்கள் கூற்று அவர்தம்முள்ளும் கேட்டற்குரியவாம். எனவே வாயிலாரும் கேட்போராவார் என்றவாறு.

சூ. 200 : ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியாற்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்

கருத்து : நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல்சான்ற புலனெறி வழக்குப் பற்றி அஃறிணைப் பொருள்களும் உயர்திணை போலக் கூறுவதும் கேட்பதுமாக அமையும் எனப்புறனடை கூறுகின்றது.

இது வழுவமைதியாய புறனடையாதலின் கூற்றும் கேட்போருமாகிய இருவகை உறுப்பும் ஒருங்குணர்த்தப் பெற்றன.

உரை : ஞாயிறு முதலாக நெஞ்சு ஈறாகக் கூறப்பெற்றனவும் அவை போல்வன பிறவும் தாமே கருதியது போன்ற முறைமையான் வாயாற் சொல்வன போலவும் செவியாற் கேட்பன போலவும் பொருளியலுள் நோயும் இன்பமும் என்னும் சூத்திர முதலாகச் சொல்லியவாறு செய்யுள் செய்தற்கமையும் என்று கூறுவர் புலவர்.

பிறவும் என்றதனான் முகிலும் தென்றலும், கண்ணும், தோளும் முதலியவும் பூவும் கொடியும் போல்வனவும் கொள்க.

புலம்புறுபொழுது = தலைமக்கள் பிரிந்து தனிமையுற்று வருந்துமிடத்துள்ள பொழுது. அவை பெரும் பொழுதும் சிறு பொழுதுமாம்.

எ-டு களவியல் கற்பியல் பொருளியல்களுள் காண்க.

சூ 201 : ஒருநெறிப்பட்டாங்கு ஓரியல் முடியும்
கருமநிகழ்ச்சி இடனென மொழிப.

கருத்து ; 'இடன்' என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது.

உரை : அகமும் புறமுமாகிய திணைக்கண் பலவகைப்பட்டு நடக்கும் ஒழுகலாறுகளுள் ஒரு நெறியான் அமைந்து ஓரொழுக்கம் நிறைதற்குரிய கருமமாகிய நிகழ்ச்சி இடனெனக் கூறுவர் புலவர்.

ஓரொழுக்கமாவது இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, அறத்தொடுநிலை, உடன்போக்கு, வரைவு, பொருள் வயிற்பிரிவு, வெட்சி, வஞ்சி, உழிஞை, என்றாங்கு வருவனவும் கைக்கிளை பெருந்திணை, என வருவனவும் பிறவுமாம்.

எ-டு அணங்குகொல் ஆய்மயில்கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு. (குறள்-)

இது தலைவன் ஐயுற்றுக் கூறியது என்றவழி, யாண்டு நிகழ்வ தென்றாற்குக் களவின்கண் இயற்கைப் புணர்ச்சியிடத்து எனவும்

பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர் (குறள்-)

இது தலைவன் புணர்ச்சி மகிழ்தல் கூற்று என்றவழி யாண்டு நிகழ்வதென்றாற்குக் கற்பின் கண் இல்வாழ்க்கையிடத்து எனவும்

நறவுத் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவலிட்ட பைங்காற் பந்தர்ப்
புனல்தரும் இளமணல் நிறையப் பெய்ம்மின்
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வருஉம் என்னைக்கு,
உழையோர் தன்னினும் பெருஞ்சாயலரே (புறம்-)

இது தந்து நிறை பற்றிக் கண்டோர் கூறியது என்றவழி, யாண்டு நிகழ்வதென்றாற்கு வெட்சிக்கண் கரந்தையிடத்து எனவும்

சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி

பாரிவேள் பாற் பாடினை செலினே (புறம்-105)
இது விறலியாற்றுப்படை என்புழி யாண்டுநிகழ்வதென்றாற்கு பாடாண்டிணையுள் புகழ்ச்சியிடத்து எனவும் ஓர் எல்லையைக் கொண்டு நிற்றலாகும்.

பொதுவாய் நிற்பனவும் முன்னும் பின்னும் வருவனவற்றான் ஓரிடத்தை வரைந்துணர்த்துமாகலின் 'இடன்' செய்யுட்கு உறுப்பாயிற்றென அறிக இடம் எனினும் களம் எனினும் ஒக்கும்.

சூ. 202 : இறப்பே நிகழ்வே எதிர தென்னும்
தித்தியல் மருங்கின் தெரிந்தன ருணரப்
பொருள் நிகழ் வுரைப்பது கால மாகும்.

கருத்து : காலம் என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது.

உரை : இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்னும் முத்திறத்தான் இரு வகைப் பொருள் பற்றிய திணை நிகழ்ச்சிகளும், இயலும் பாங்கினான் செய்யுட்கண் வரும் பொருள் நிகழ்வினது காலத்தைத் தெரிந்துணருமாறு உரைக்கப் பெறுவது காலமென்னும் உறுப்பாம்.

உய்த்துணருமாறின்றி விளங்க நிற்றல் வேண்டுமென்பார்'' தெரிந்தனர் உணர'' என்றார்.

எ. டு. : எவ்வியழந்த வறுமையாழ்ப் பாணர்ப்
பூவில் வறுந்தலைப் போலப் புல்லென்று
இனைமதி வாழிய நெஞ்சே மனைமரத்து
எல்லுறு மௌவல் நாறும்
பல்லிருங்கூந்தல் யாரளோ நமக்கே (குறு—19)

இது பன்முறையான் உணர்த்தியும் தலைவி ஊடல் தவிராவழித் தலைவன் இனைந்து கூறியதாகலின் ஊடல்நிகழ்வு இறந்த காலத்தது என்பது தெரிந்துணர நின்றது.

நள்ளென்றன்றே யாமம் சொல்லவிந்து
இனிதடங்கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சாதேனே (குறு-8)

இது களவின்கண் வரைபொருட்குப் பிரிந்த தலைவனை எண்ணி வருந்துந்தலைவி தோழி உறங்குதலை நோக்கிக் கூறியதாகலின் துஞ்சுதல் நிகழ்ச்சி நிகழ்காலத்ததெனத் தெரிந்துரை நின்றது.

அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோ ராயின்
உரவோர் உரவோ ராக
மடவமாக மடந்தை நாமே (குறு-20)

இது தோழி தலைவனின் பிரிவு பற்றிக் கூறிய வழி தலைவி கூறியது. இதன்கண் பிரிதலாகிய நிகழ்ச்சி எதிர்காலத்தது எனத் தெரிந்துணர நின்றது. பிறவும் இவ்வாறே கண்டு கொள்க.

கூற்று நிகழ்த்தும் காலத்தை உணர்த்தாமல் பொருள் நிகழ் வினை உணர்த்தும் காலமே ஈண்டு உறுப்பெனப்பட்டது என்றறிக.

மாலை முதலாய சிறுபொழுதும் கார் முதலாய பெரும் பொழுதும் திணை உணர்தற்குரிய உறுப்பாதலன்றிச் செய்யுளுக்குரிய உறப்பாகா என்றறிக.

சூ 203 : இது நனி பயக்கும் இதன்மா றென்னும்
தொகைநிலைக் கிளவி பயனெனப் படுமே.

கருத்து : பயன் என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது.

உரை : இதன் காரணமாகப் பெரிதும் இது விளையும், என்னும் முடிவினை அறிய நிற்கும் கூற்றுக்கள் பயன் என்று கூறப் படும்.

பயனைக் கருதியன்றிச் சான்றோர் சொற்களை வழங்கா ராதலின் அச்சொற்றொடர் வாயிலாகக் கேட்போர்க்குத் தாம் கருதும் பயனைத் தோன்றச் செய்தல் இவ்உறுப்பாகும்

அஃதாவது தலைவன் முதலாகக் கூற்று நிகழ்த்துவோர் சொற்களுக்குள் மறைந்து நிற்கும் பயனைக் கேட்போர் உணருமாறு கிளத்தல்.

எ-டு செல்லாமை யுண்டேல் எமக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. [குறள்-]

இத்தோழி கூற்றுத் தலைவியின் ஆற்றாமை உணர்த்தல் பயனாக வந்தது.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு

இடித்துரைப்பாரை அரசன் உழையராகக் கொள்க என்பது இதன் பயனாம் ஏனையவும் இவ்வாறே வரும்.

சூ 204 : உயத்துணர்வின்றித் தலைவரு பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்.

கருத்து : 'மெய்ப்பாடு' என்னும் செய்யுளுறுப்பினது இலக்கணம் கூறுகிறது.

உரை : மேல் மெய்ப்பாட்டியலுள் பலவாக விரித்துக் கூறிய மெய்ப்பாடுகள் ஒரு செய்யுட்கண் ஒன்றும் பலவும் வரும் வரினும்

நுண்ணிதாக உய்த்துணருமாறன்றி அச்செய்யுட்கண் சிறப்பாக வரும் பொருளான் இது மெய்ப்பாடு என அப்பொருண்மை தோன்ற முடிந்து நிற்பது மெய்ப்பாடு என்னும் உறுப்பாகும்.

மெய்பாடுகளைப்பற்றி மேல்விரித்துக் கூறப்பெற்றதனால் ஒரு செய்யுட்கண் பலவரினும் அவற்றுள் தலையாயதாக நிற்பதே உறுப்பாகச் சுட்டப் பெறும் என்பது கருத்து.

சூ. 205 : எண்வகை இயல்நெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே

கருத்து : மெய்பாட்டியலுட் கூறப்பெற்ற இயல்பினதே அது என்கின்றது.

உரை : எட்டு வகையான் இலக்கணநெறி பிழையாமல் வருவனவாக மேல் மெய்ப்பாட்டியலுட் கூறப்பெற்ற முடிவுகளை யுடையதே அது.

எ-டு. : மெய்பாட்டியலுட் கண்டு கொள்க.

சூ. 206 : சொல்லொடும் பொருளொடும் முடிவுகொள் இயற்கை
புல்லிய கிளவி எச்சமாகும்.

கருத்து : எச்சம் என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது.

உரை : சொல்லதிகாரத்துள் சொல்லெச்சமும் இசை(பொருள்) எச்சமும் இவ்வாறு முடியும் என்ற இலக்கணத்தைப் பொருந்திவரும் கிளவி எச்சமென்னும் உறுப்பாகும்.

சொல்லதிகாரத்துக் கூறப்பெற்றவையே இவை, வேறு அல்ல என்பார் 'முடிவு கொல் இயற்கை' என்றார்;

ஆண்டுச் சொல்லிலக்கண நோக்கிற்கூறிய பத்துவகை எச்சங்களுள் இவ் இரண்டுமே செய்யுட்கு உறுப்பாகக்கொள்ளப் பெறுவனவாதலின் விதந்து கூறினார்.

எ-டு 'மருந்தெனின் மருந்தே வைப்பெனிவைப்பே'' (குறு-17)
இச்செய்யுளுள் 'எமக்கு' என்னும் சொல் எச்சமாக நின்றது.
சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண். (குறள்-)

''பிரியேன் என்றுரைத்த சூளுரையைக் காவாமையின் அவர்பால் நிற்க வேண்டிய சிறுமை'' அவரின் நீங்கி நம்கண் வர என்பது பொருள் இது குறிப்பெச்சம்.

இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து. (குறள் -)

கொடும் பகையைக் காலத்தொடு வெல்க என்பது குறிப்பெச்சம். பிறவும் இவ்வாறு செய்யுளின் பொருளை முடித்தற்குரியனவாக வருபவையெல்லாம் இவ்வுறுப்பாகக் கொள்க.

சூ. 207 : இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியதென் று
அவ்விடத் தவரவர்க்கு உரைப்பது முன்னம்

கருத்து : 'முன்னம்' என்னும் செய்யுறுப்பாமாறு கூறுகின்றது.

உரை : எழுவகைத் திணைப் பொருளைப் பற்றி வரும் கரும நிகழ்ச்சிக்கண் வரும் கூற்றுமொழி, இவரிவர்க்குரியது என அவ்வவ் விடத்து அவரவர்க்குப் பொருந்த உரைப்பது முன்னம் என்னும் உறுப்பாகும்.

முன்னம்சிந்தித்து உணரும் குறிப்பு. உரைப்பது என்றது செயப் பாட்டு வினைப்பொருளில் வந்தது.

செய்யுள் செய்யும் புலவன் அவ்வவ் உறுப்பினரை அவ்வாறு உரைக்கச் செய்வது என்பது கருத்து.

எ-டு "ஏஎ இஃதொத்தன்" என்னும் குறிஞ்சிக்கலியுள் வரும் தலைவன் தலைவியர் பெருந்திணையின் பாற்படுவர் என்பது தோன்ற அவர் உரை நிகழ்ந்தவாறு காண்க.

"என்னோற்றனை கொல்லோ" என்னும் மருதக்கலியுள் வரும் தலைவன் தலைவியர் ஏவல் மரபினராகிய அடியோர் என்பது தோன்ற உரை நிகழ்ந்தவாறும் "யாரிவன் என்னைவிலக்குவான்" என்னும் முல்லைக்கலியுள் வருபவர் வினைவலபாங்கினராகிய நிலமக்கள் என்பது தோன்ற உரைநிகழ்ந்தவாறும் "புரிவுண்ட புணர்ச்சியுள் புல்லாரா மாத்திரை" என்னும் நெய்தற்கலியுள் வரும் தலைமகள் கூற்றுப் பெருந்திணைக்குரியவை போலக் கூறினும் ஐந்திணைக்குரிய தலைவியே இவள் எனப் புலப்பட உரைநிகழ்ந்த வாறும் காண்க

"நள்ளிவாழியோ நள்ளி, நள்ளென்" (புறம் 149) என்னும் புறப்பாட்டு வரவு எமர் மறந்தனர்" என்றமையான் பாணன் கூற்று என உணர நின்றவாறும் "மழைக்கணம் சேக்கும் மாமலைக் கிழவன்" (புறம்-131) என்னும் புறப்பாட்டு, "குன்றம்பாடினகொல்லோ களிறுமிகவுடைய" என்றமையான்

புலவர் கூற்று என உணர நின்றவாறும் காண்க. பிறவும் இவ்வாறே கண்டுகொள்க.

சூ. 206 : இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்குநெறி யின்றி
இதுவாகு இத்திணைக்கு உரிப்பொரு ளென்னாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப.

கருத்து : 'பொருள் வகை' என்னும் செய்யுளுறுப்புப் பற்றிய இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை : களவின்கண் இயற்கைப்புணர்ச்சி முதலியுவற்றான் வரும் இன்பமும், ஒருவழித்தணத்தல், வருந்தொழிற்கருமை, வரைபொருட் பிரிவு முதலியவற்றான் வரும் இடும்பையும், கற்பின்கண் இல்வாழ்க்கை, ஊடலுணர்தல் முதலியவற்றைப் பொருந்திவரும் பிரிவில்லா உடனுறைவும், ஓதல், பகை முதலியவற்றான் நிகழும் பிரிவும், விருந்தோம்பல் அறப்புறங்காவல் முதலிய ஒழுக்கமும், புறத்திணைகளுள் வெட்சி முதலியவற்றான் வரும் இன்பமும், இடும்பையும், பாடாணும் வாகையும் பற்றி நிகழும் ஒழுக்கமும், என்று சொல்லப்பெற்ற அவ்வொழுகலாறுகள், இழுக்குறும் முறைமையின்றிக் கைக்கிளை முதலாகிய பதினான்கு திணைகட்கும் ஓதப்பெற்ற மரபினான் இவ்வொழுக்கம் (உரிப்பொருள்) இத்திணைக்கே உரியது என வலிந்து கூற நில்லாமல் அவ்வொழுகலாறுகள் பொதுவாக நிற்றல் பொருள்வகை எனக் கூறுவர் புலவர்.

என்றது, மேற்கூறிய இன்பம் முதலாய ஒழுகலாறுகள் நானில மக்கள் யாவர்க்கும் உரியவையாதலின்

முதல்கரு உரிப்பொருள் என்று மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை (அகத்திணை-3)

எனத் திணையை வரையறை செய்தற்காக ஓதப்பெற்ற இலக்கணத்தால், முதற்பொருள் பற்றியும், கருப்பொருள் பற்றியும், திணை கூறுங்கால் அவ்வத்திணைகட்கு ஏற்கும் என ஓதப்பெற்ற உரிப்பொருளே ஆண்டு வரல் வேண்டுமென்பதில்லை. அவை பொதுவாய் நிற்கும் என்றவாறு.

அகத்திணையியலுள் ஓதப்பெற்ற புணர்தல் முதலாய உரிப்பொருள்கள் குறிஞ்சி முதலாய திணைகட்கு உரியவை என்று கூறியதன்றி இதுவே இத்திணைக்கண் வரல் வேண்டுமென்னும்

யாப்புறவில்லை. அவை பொதுவாயும் வரும் என்பதும் அவ்வாறு வருதல் பொருள்வகை என்பதும் கருத்து. உரிப்பொருள் காரண மாகத் திணை திரிதல் இல்லை என்பதனை.

திணைமயக்குறுதலும் கடிநிலையிலவே
நிலன்ஒருங்கு மயங்குத லில்லென மொழிப (அகத்-14)

என்றதனாலும் உணரலாம்.

எ-டு யானே ஈண்டை யேனே என்நலனே
ஏனல் காவலர் கவண் ஒலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு ஆண்டொழிந் தன்றே (குறுந்-54)

இப்பாடல் முதற்பொருளானும் கருப்பொருளானும் குறிஞ்சித் திணையாய் நின்று பிரிவாகிய உரிப்பொருளைக் கொண்டு நின்றது. வரைபொருட் பிரிவாகிய பாலையாதலின் அவ்வொழுக்கம் இழுக்கு நெறியின்றியமைந்தவாறு காண்க.

அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானாகியர் நின் நெஞ்சுநேர் பவளே. (குறுந்-49)

இப்பாடல் முதற்பொருளானும் கருப்பொருளானும் நெய்தலாய் நின்று உரிப்பொருள் பொதுவாக நின்றது. ஊடலின்றித் தலை மகன் பிரிவாற்றாமை என்னும் இரக்கம் தோன்றக் கூறினமையின் இழுக்குநெறியின்றி அமைந்தவாறு காண்க.

உதுக்காண் அதுவே இதுவெனமொழிகோ
நோன்சினை இருந்த இருந்தோட்டுப் புள்ளினம்
தாம்புணர்ந் தமையின் பிரிந்தோர் உள்ளத்
தீங்குரல் அகவக் கேட்டும், நீங்கிய
ஏதி லாளர் இவண்வரின், போதின்
பொம்மல் ஓதியும் புனையல்
எம்மும் தொடாஅல் என்குவெம் மன்னே (குறுந் 191)

இப்பாடல் கருப்பொருளான் முல்லைத்திணையாய் நின்று ஊடல் என்னும் உரிப்பொருள் தோன்ற நின்றவாறும், பிரிவாற்றாமை தோன்ற நின்றவாறும் காண்க. "ஓதியும் புனையல் எம்மும் தொடாஅல் என்குவெம்" என்றதனால் அதுவரை ஆற்றியிருப்பேன்

என்பது தோன்ற நின்றமையின் இழுக்கு நெறியின்றி அமைந்தவாறு காண்க. பிறவும் இவ்வாறே ஓர்ந்துகொள்க. ஏனைய விளக்கம் உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே (அகத்-15) என்னும் சூத்திர உரையுட் கண்டு கொள்க

சூ. 209 : அவ்வம் மாக்களும் விலங்கு மன்றிப்
பிறஅவண் வரினும் திறவதின் நாடித்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறந்தானே துறையெனப் படுமே.

கருத்து : 'துறை' என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது.

உரை : நடுவணைந்திணைக்கு உரிமைப்படுத்தோதிய நிலமக்களும், விலங்கும் பிறவும் செய்யுட்கண் கருப்பொருளாய்ப் பொதுப்பட வரினும், அச்செய்யுட்குரிய உரிப்பொருளைத் திறமுற ஆராய்ந்து அவ்வத்திணைக்குரிய இலக்கணத்தான் முடிக்கப்பெறின் அங்ஙனம் முடியும் யாப்பினது திறனே துறை என்று கூறப்படும்.

"பிற" என்றதனான் ஊரும் நீரும் பூவும் மாவும் பிறவும் கொள்க. வரினும் என்னும் உம்மை வாராமை தோன்ற நின்றது.

அஃதாவது மேற்கூறிய 'பொருள் வகை' என்னும் உறுப்பு அமையுங்கால் அது திணைப் பொருளை மயக்குமளவிற்காகாது என்பதும், பொருள்நிகழ்ச்சியால் இதன் உரிப்பொருள் இதுவென உணரும் வண்ணம் மரபிற் பிறழாமல் அமைத்தலே துறை" என்பதும் இதன் கருத்தாகும்.

எ-டு : "ஊர்க்கால் நிவந் பொதும்பருள்" என்னும் குறிஞ்சிக் கலியுள் வரும் தலைவியை "கொழுநிழல் ஞாழல் முதிரிணர் கொண்டு, கழும முடித்த கண்கூடு கூழை" என நெய்தல் நிலத்துத் தலைமகள் போலவும் "ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்" என அவளை மருதநிலத்துக் கண்டான் போலவும் "இவளைச் சொல்லாடிக் காண்பென் தகைத்து" என முல்லை நிலத்து மகன் போலவும் கூற்று நிகழ்த்திய தலைவன்

நிறையழி கொல்காயானை நீர்க்குவிட்டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடையான். (கலி-) என முடித்தலின்

இது சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின் புறலாகிய கைக்கிளை யின்பாற்பட்டுக் குறிஞ்சித்திணைக்குரிய பொருளாய்த் துறை கொள அமைந்தவாறு காண்க.

சூ. 210 : அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருள் முடியத் தந்தனர் உரைத்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கில்

கருத்து : 'மாட்டு' என்னும் செய்யுள் உறுப்பாமாறு கூறுகின்றது.

உரை : ஒரு தொடர்நிலைச் செய்யுட்கண் பொருளின் தொடர்பை உணர்த்தும் சொற்களும் சொற்றொடர்களும் சேய்மைத்தாக நிற்பினும் அண்மைத்தாக அமையினும் அப்பொருள் இயன்று முடியுமாறு அவற்றைக் கூட்டி உணர்த்துதலைப் பாட்டியல் வழக்கின்கண் 'மாட்டு' எனக் கூறுவர் புலவர்.
கூட்டுதல் - கோத்தமைத்தல், இயைத்தல்.

தொடர் நிலைச் செய்யுளுள் இடையே வரும் வண்ணனைகளையும் இடைப்பிறவரலாக வருவனவற்றையும் ஓர்ந்து பொருட்டொடர்பைக் காட்டும் சொற்றொடரை ஆங்காங்கே இயைபுபடுத்துவது இவ்வுறுப்பாகும்.

பொருள்கோள் வேறு - 'மாட்டு' என்னும் இவ்வுறுப்பு வேறு. சுண்ணம் முதலாகிய பொருள்கோள் சொற்களைத் துணித்துப் பொருள் பொருந்தக் கூட்டுவது. மாட்டென்பது புலவரின் கருத்துத் தோன்ற இயன்ற பொருளை இணைத்துக் காட்டுவதாகும்.

இவ்வுறுப்பு எல்லாச் செய்யுட்கும் வரல் வேண்டுமென்னும் யாப்புறவில்லை இவ்வுறுப்புப் பெற்றதனையே பாட்டு என்பது பண்டையோர் மரபு. திருமுருகாற்றுப்படை முதலியவற்றைப் பத்துப்பாட்டு என்றதும் இம்மர புபற்றியேயாம். இதனை, ஆசிரியர் ''பாட்டியல் வழக்கு'' என்றதனான் அறியலாம்.

எ-டு : மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிறைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந் தியற்றாக் கவின் பெறுவனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழை
சேணிகந்து விளங்கும் செயிர்தீர் மேனி
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளை தூ விதழ் கிள்ளித்

தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டி
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைத்த பிண்டி ஒண்டளிர்
நுண்பூ ணாகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுறிஞ்சிய பூங்கேழ்த்தேய்வை
தேம்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலை கொட்டி, விரிமலர்
வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப்பாடி
சூரர மகளிர் ஆடும் சோலை,
மந்தியும் அறியா மரம்பயில் அடுக்கத்துச்
சுரும்பும் மூசாச்சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்''

(முருகு 12-44)

இங்ஙனம் முருகாற்றுப்படையுள் வரும் இம்முப்பத்து மூன்றடிகளுள் புலவர் அமைத்துள்ள பொருளைச் சுவைபடக் காணுங்கால்

சேணுயர் வெற்பின், சோலை, அடுக்கத்துக் காந்தள், மிலைந்த சென்னியன் என்றும்
கிண்கிணிகவைஇய சீறடி, தோள், அல்குல் - கவின் பெறு வனப்பின் சூரரமகளிர் என்றும்
செயிர்தீர் மேனி, திருநுதல் துகளறுமுச்சி கவின்பெறு சூரரமகளிர் என்றும்
செண்பகம் செறிஇ, அட்டி வளைஇ திளைப்பக் கொட்டி அப்பிய வனப்பின் சூரர மகளிர் ஆடும் சோலை என்றும்.

சேய்த்தும் அணித்துமாகச் சொற்களை மாட்டிப் பொருள் கொள வைத்துள்ளமையையும் வனப்பினை மீட்டும் மீட்டு

மறித்துக் கூட்டிப் பொருள் கொள்ளுமாறு வைத்துள்ளமையையும் காண்க.

இதற்குப் பேராசிரியர் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளமுறை பொருள்கோள் என்பதற்கு ஒத்ததாக உள்ளது.

சூ. 211: மாட்டும் எச்சமும் நாட்டலின்றி
உடனிலை மொழியினும் தொடர்நிலைபெறுமே

கருத்து : மாட்டு, எச்சம், என்னும் உறுப்புக்கள் பற்றித் தொடர் நிலைச் செய்யுள்கட்கொரு புறனடை கூறுகின்றது.

உரை : மேற்கூறிய மாட்டும், எச்சமும் ஆகிய அவ் உறுப்புக் களின்றி ஒன்றன்பின் ஒன்றாகப் பொருள் முடிந்து செல்லும் முறைமையாற் செய்யினும் அவை தொடர்நிலைச் செய்யுள் என நிலைபெறும்.

இதனான் அவ்இரண்டு உறுப்புக்களும் இன்றிவரினும் தொடர்நிலைச் செய்யுள் என்று கூறுதற்கிழுக்கில்லை என்பதும் அவை புலவோர் தம் சதுரப்பாடு தோன்ற நாட்டப்பெறும் உறுப்புகள் என்பதும் புலப்படும்.

எ-டு : சிலம்புள்ளும், பெருங்கதையுள்ளும் மாட்டின்றிப் பலகாதைகள் அமைந்துள்ளமை காண்க.
நற்றிணை முதலாய தொகைப் பாடல்களுள் பல எச்சமென்னும் உறுப்பின்றி வந்துள்ளமை காண்க.

மாட்டும் எச்சமும் என இடமுதலாக எண்ணிக் கூறியதன்றித் தலை தடுமாற்றாகக் கூறவில்லை என்றுணர்க.

சூ. 212: வண்ணந்தானே நாலைந் தென்ப

கருத்து : இது முதலாக வண்ணம் என்னும் செய்யுளுறுப்புப் பற்றிய இலக்கணங் கூறுகின்றார். இச்சூத்திரம் வண்ணத்தின் தொகையாமாறு கூறுகின்றது.

பொருள் : வண்ணம் எனச் சிறப்பித்துக் கொள்ளப்பெறுவன இருபஃது என்று கூறுவர்.

பிறவாறும் வகுத்துக் கூறுவார் உளர் என்பது தோன்ற இருபஃது என்னாது "நாலைந்து" என்றார்.

வண்ணம் - ஓசை நடை.

இசைநூலுள், பாலைத்திரிபுகளுள் குறிப்பிட்ட பண் அமையுமாறு செய்யும் உறுப்பினைத் நிறம் என்ப. அவ்வாறே இயற்றமிழுள் அமையும் ஓசைநடையை வண்ணம் எனல் மரபு. வண்ணம் என்னும் சொல்லே அதன் இலக்கணத்தைப் புலப்படுத்து நின்றது.

சூ 213: அவைதாம்,
பாஅ வண்ணம் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்
எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம் முடுகுவண்ணமென்று
ஆங்கென மொழிப அறிந்திசி னோரே

கருத்து: மேற்கூறிய வண்ணம் இருபஃதின் பெயரும் முறையும் கூறுகின்றது. 'என்று' என்பது எண்ணிடைச் சொல்.

உரை; இருபஃதெனப் பெற்ற அவ்வண்ணங்கள் தாம் பாவண்ணமும் .... முடுகுவண்ணமும் என எடுத்துக் கூறுவர் வண்ணத்தியல்பினை அறிந்த புலவர். ஆங்கு என்பது அசை.

இவற்றின் இயல்புகளைப் பின்னர் முறையாகக் கூறுவார். இவ்வண்ணங்கள் சீர்பற்றியும் எழுத்துப் பற்றியும் தொடை பற்றியும் இசைபற்றியும் சொல்பற்றியும் வருதலின் சொற்சீரடி முதலாக எழுசீரடியளவும் எல்லா அடிக்கண்ணும் கொள்ளப்பெறும் நாற்சீரடிக்கண் வருவன சிறப்புடையவாகும். தொடை பற்றி வரும் வண்ணம் நாற்சீரடிக்கண் கொள்ளப்படும்.

மற்று இவ்வணங்கள் ஓரடியை எல்லையாகக் கொண்டு வகுக்கப்படுதலின் ஒரு செய்யுளின்கண் ஒரே வண்ணம் வரல் வேண்டுமென்னும் யாப்புறவில்லை. வரின் சிறப்புடையதாகும்.

சூ. 214: அவற்றுள்
பாஅ வண்ணம்
சொற்சீர்த் தாகிநூற்பாற் பயிலும்

கருத்து : பாவண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : மேல் நிரல்படுத்திய இருபது வண்ணங்களுள் பாவண்ணம் சொற்சீரடிகளை உடையதாகி இலக்கண நூலின்கண் பயின்று வரும்.

நூற்பாற் பயிலும் எனவே பிற செய்யுட்கண் அருகிவரும் எனக் கொள்க. பாவுதல் = பரவி நிற்றல்.

எ-டு : அவற்றுள்
அஇஉ
எஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓரளபிசைக்குங் குற்றெழுத்தென்ப. (எழுத்-3)
கடாஅம் சென்னிய கடுங்கண்யானை
இனம் பரந்தபுலம் வளப்பரப் பறியா
நின்படைஞர்
சேர்ந்த மன்றம் கழுதை போகி (பதிற்-25) எனவரும்.

இவ்வண்ணம் சீரைப் பற்றித் தோன்றும்.

சூ 215; தாஅ வண்ணம்
இடையிட்டு வந்த எதுகைத்தாகும்.

கருத்து : தாஅ வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : தாஅவண்ணமாவது ஒருசீர் இடையிட்ட எதுகையினையுடையதாய் வரும்.

(எ-டு) யாரினும் இனியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக் கீனில் இழைஇயர் (குறுந்-85)

எனவரும் இவ்வண்ணம் தொடைநிலை பற்றி வரும்.

சூ. 216 : வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே.
கருத்து : வல்லிசை வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : வல்லிசை வண்ணமாவது வல்லெழுத்துக்கள் பிறவற்றினும் மிக்கு வரும்.

எ-டு சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇ
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை (குறுந்-142)

எனவரும். இவ்வண்ணம் எழுத்துப் பற்றியதாய் வரும்.

சூ 217 : மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே

கருத்து : மெல்லிசை வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : மெல்லிசை வண்ணமாவது மெல்லெழுத்துக்கள் பிறவற்றினும் மிக்கு வரும்.

எ-டு : மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண் டனகொல்
வண்டின் மாண்குணம் மகிழ்நன்கொண் டான்கொல்
(ஐங்-90)

எனவரும். இவ்வண்ணமும் எழுத்துப்பற்றியதாய் வரும்.

சூ. 218 : இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.

கருத்து : இயைபு வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : இயைபு வண்ணமாவது இடையெழுத்துக்கள் பிறவற்றினும் மிக்குவரும்.

எ-டு : ஓரூர் வாழினும் சேரி வாரார்
சேரி வரினும் ஆரமுயங்கார் (குறு-231)

எனவரும். இவ்வண்ணமும் எழுத்துப் பற்றியதாய் வரும்.

சூ 219 : அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்.

கருத்து : அளபெடைவண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : அளபெடை வண்ணமாவது இருவகை அளபெடைகளும் பயின்று வரும்.

எ-டு தோஎர் பரந்தபுலம் ஏஎர் பரவா (பதிற்-26)
பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்றுநுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள் (கலி-36)
சிறாஅஅர் துடியர் பாடுவல் மகாஅஅர் (புறம்-291)
கண்ண் டண்ண்ணெனக் கண்டும் கேட்டும்.

எனவரும். இவ்வண்ணம் தொடை பற்றியதாய் வரும். எழுத்துப் பற்றியதெனினும் ஒக்குமாதலின் மிகும் என்னாது ‘பயிலும்’ என்றார்.

சூ. 220 : நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்

கருத்து : நெடுஞ்சீர்வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப் பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்துத் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப் பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பி யனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ் நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ	4	00
நக்கீரர் - நாவலர் ந மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	75

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]	ரூ.	4	50
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	6	00

விற்பனைக் கழிவு 20% உண்டு அஞ்சற் செலவு தனி.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

Regd. No. TN/TB/24.

நூல்-அஞ்சல்

பெறுநர்

நூலகர்,

திருமிகு தஞ்சை [illegible] சரஸ்வதி

மகால் நூலகம்,

அரண்மனை

தஞ்சை.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, [illegible],
தஞ்சாவூர் - 613 009.